Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 175 குரோதி வருடம், மாசி மாதம் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(21.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 22, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12





## கமெண்ட் கந்தர்...



ஒருதடவை
நீதிமன்றத்தில
சம்பவம் நடந்தா
மீண்டும் அதே
வேலையை
அங்கேயே
செய்வானுகளா?

## உஷ்



நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, அரச மேல்மட்ட உறுப்பினர்களின் பாதுகாப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவாம்.

பொது நிகழ்வுகளுக்கு ஆளுங்கட்சியின் மேல்மட்ட உறுப்பினர்கள் செல்லும்போது உரிய பாதுகாப்புடன் செல்லவும், ஆயுதம் தாங்கிய பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்களை அழைத்துச் செல்லவும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாம்.

பாதாள உலக கோஷ்டியினர் பின்னணியில் அரசியல்வாதிகளும் இருப்பதால் இந்த அதிரடி நடவடிக்கை இரகசியமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.




# நீதிமன்றங்களுக்கு உயர் பாதுகாப்பு!

## அரசு அதிரடித் தீர்மானம்

நாட்டின் நீதிமன்றங்கள் அனைத்திலும் உயரடுக்கு பாதுகாப்பு கட்டமைப்பை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்று (20) பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

இதன்போது, நீதிமன்றங்கள் அனைத்துக்கும் போடப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அடுத்தவாரம் முதல் நீதிமன்றங்களில்...

» 02 பக்கம்

# எம்.பிக்களின் உயிருக்கு சபாநாயகரே பொறுப்பு!

## சபையில் தயாசிறி காரசார உரை; நீதிபதிகளின் பாதுகாப்புக்கும் வலியுறுத்து



"தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்த வேண்டாம். புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபருடன் நீதிமன்ற உள்ளக மட்டத்திலும் தொடர்பு இருக்கலாம். முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். நீதிபதிகளின் பாதுகாப்பை குறைத்தால் சட்டத்தின் ஆட்சி மலினப்படுத்தப்படும்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் வலியுறுத்தினார்.

மனிதப் படுகொலைகள் தற்போது சாதாரணமாகிவிட்டன. பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதன் பொறுப்பை சபாநாயகர் ஏற்க வேண்டும் என்றும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான 3ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

» 02 பக்கம்

# ரயில் மோதியதில் ஆறு யானைகள் பலி

## கல்லோயாவில் சம்பவம்



» 02 பக்கம்

# பேச்சுவார்த்தை தோல்வியே அதானி வெளியேறக் காரணம்

## காற்றாலைத் திட்டம் குறித்து அரசாங்கம் விளக்கம்



"மன்னார் காற்றாலை வேலைத்திட்டத்தின் கீழ் அதானி நிறுவனத்திடமிருந்து ஒரு கிலோவோட் மின்சாரத்தை 8.26 சென்ட் அமெரிக்க டொலருக்கும் குறைவாக கொள்வனவு செய்வது தொடர்பில் அந்த நிறுவனத்துடன் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தமையின் காரணமாக அந்த நிறுவனம் இந்த வேலைத்திட்டத்திலிருந்து விலகியுள்ளதாக"...

» 02 பக்கம்

# கனேமுல்ல சஞ்சீவ கொலை; பல கோணங்களில் விசாரணை

கே.சுபானி

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் ஐந்தாம் இலக்க நீதவான் நீதிமன்றத்துக்குள் வைத்து பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'கனேமுல்ல சஞ்சீவ'...

» 02 பக்கம்

# தாராளவாதமாகிவிட்ட சோசலிச கொள்கை

## பாதீடு தொடர்பில் திலித் எம்.பி. அதிருப்தி



» 02 பக்கம்

# உயர்வடைகிறது வெப்பநிலை



## பாடசாலைகளுக்கு விசேட பரிந்துரைகள்

» 02பக்கம்

# யானை தாக்கி அரசியல்வாதி பலி

பதுர்தீன் சியானா



திருகோணமலை, மொரவெவ பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சாலிய ரத்னாயக்க, யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

» 02 பக்கம்

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## அச்சப்பட வேண்டாமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

"புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ மீதான துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினால், தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதுடன், நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது"...

» 02 பக்கம்

# எஸ்.பி. சாமி காலமானார்



பிரபல தொழிலதிபரும் தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகருமான எஸ்.பி. சாமி தனது 89ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

» 02 பக்கம்

# வாய்ப்புற்றால் நாளொன்றுக்கு 04 பேர் மரணம்

கே.சுபானி

நாட்டில் நாளொன்றுக்கு வாய்ப் புற்றுநோயால் 3 முதல் 4 வரையான நோயாளர்கள் உயிரிழப்பதாக வாய் புற்றுநோய் நிபுணர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து....

» 02 பக்கம்






# பாதாள உலகத்தை முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஜனாதிபதி தெரிவிப்பு



பொதுமக்களின் பாதுகாப்புக்காக உள்ள உத்தியோகபூர்வ நிறுவனங்களில் பாதாள உலகத்தின் செயற்பாடுகள் விரிவடைந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகவும் எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்....

» 02 பக்கம்

## தாராளவாதமாகிவிட்ட...

''ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்துக்கும் அவரது தேர்தல் கொள்கைப் பிரகடனத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. இதில் சோசலிஷம் எதுவும் இல்லை. மாறாக நவீன தாராளவாத கொள்கையுடனேயே இந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது'' என சர்வசன அதிகார கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று (20) கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்துக்கு அற்புதமான வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த அரசாங்கத்திலுள்ள அநேகமானவர்கள் எதிர்த்தரப்பில் இருந்திருந்தால் நாட்டில் எத்தனை போராட்டங்கள் நடந்திருக்கும். வரவு - செலவுத்திட்ட உரைகளுக்கு புரட்சியே செய்திருப்பார்கள். இருந்தபோதும் எவ்வாறு முன்னோக்கி செல்வது என்பதற்கான வாய்ப்பாக இதனை பயன்படுத்திக்கொள்ளவே முயற்சிக்கிறோம். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்திலுள்ள எந்தவொரு விடயமும் வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை. தேசிய மக்கள் சக்தியின் வரவு - செலவுத்திட்டத்தில் எந்த சோசலிஷமும் இல்லை. சோசலிஷம் இருந்திருந்தால் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டவுடனேயே ஊரில் இருப்பவர்களுக்கு 76 வருடங்களின் பின்னர் எமது வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். அஸ்வெசும கொடுப்பனவை 1,500 ரூபாவால் அதிகரித்ததாலேயோ சிறுநீரக நோயாளர்களுக்கு 2,000 ரூபா அதிகரித்ததாலேயோ இந்த வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு உணர்வை ஏற்படுத்தியிருக்காது. என்னை பொறுத்தவரையில் இது நவீன தாராளவாத வரவு - செலவுத்திட்டமாகும். ஆனால், அதில் எமக்கு பிரச்சினையில்லை. தொழில்முனைவோருக்கான அரசாங்கத்தை உருவாக்கி இளைஞர்களுக்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்றே நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாட்டுக்கு புதிய முதலீடுகளை கொண்டுவரவும் நாட்டை விட்டுச் சென்றவர்களை அழைத்து வரவும் நாட்டின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவுமே நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றார்.

## கனேமுல்ல...

என்றழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரரத்ன நேற்றுமுன்தினம் (19) சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபரென அடையாளம் காணப்பட்டுள்ள முன்னாள் இராணுவ கொமாண்டர், அவர் தப்பிச் செல்வதற்கு உதவிய வேன் சாரதி ஆகிய இருவரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இருவரும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு நேற்று (20) கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விளக்கமளித்திருந்தனர்.

இந்நிலையில் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான முச்சக்கரவண்டியின் சாரதியென அறியப்படும் சமிது தில்ஷான் பியுமங்க கந்தனாராச்சி மற்றும் வேன் சாரதி கரன்சாரகே மகேஷ் சம்பத் பியதர்ஷன ஆகியோர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கும் 24 மணிநேர கால எல்லை போதாமை காரணமாக, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7/1 கீழ் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளரின் உத்தரவின்படி, 72 மணிநேரம் துறைமுக பொலிஸில் தடுத்துவைத்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளனர்.

மனித படுகொலை, அதற்கு உதவுதல் மற்றும் உடந்தையாக இருத்தல் ஆகிய பிரிவுகளைக் கையாளும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 296 இன் கீழும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் சந்தேக நபர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றத்திடம் விளக்கமளித்துள்ளனர்.

மேலும், சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் (19) மாலை 4:30 மணியளவில் கைது செய்யப்பட்டதாகவும் பிரதான சந்தேகநபரான சமிது (வயது 27) மஹரகமைவைச் சேர்ந்தவர் என்பதுடன் அவர் தப்பிக்க உதவிய வேன் சாரதி சம்பத் பியதர்ஷன (வயது 44) மில்லேவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

### பொதுமக்களின் உதவியை நாடும் பொலிஸ்

இதனிடையே, கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெண்ணை கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

குறித்த பெண் தொடர்பான தகவல்களை வழங்கும் நபருக்கு பணப்பரிசில் வழங்கப்படுமென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

071 8591727 மற்றும் 071 8591735 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல்களை தெரிவிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது

இந்நிலையில் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 25 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் அதிகாரி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ என்பவரை சுட்டுக்கொலை செய்வதற்கு சட்டத்தரணி வேடத்தில் சென்ற பிரதான சந்தேக நபருக்கு உதவி செய்த பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளை பேணி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தவறாக பகிரப்பட்ட சந்தேகநபரின் பெயர்

இதேவேளை, கனேமுல்ல சஞ்சீவவின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் பெயர் மொஹம்மட் அஷ்மன் ஷெரிப்டீன் என தவறாக பகிரப்பட்டதால் மொஹம்மட் அஷ்மன் ஷெரிப்டீனின் குடும்பத்துக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மொஹம்மட் அஷ்மன் ஷெரிப்டீன் என்பவரின் சகோதரனால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரின் பெயர் மொஹம்மட் அஷ்மன் ஷெரிப்டீன் என ஊடகங்களில் தவறாகப் பகிரப்பட்டது.

இதனால், மொஹம்மட் அஷ்மன் ஷெரிப்டீனின் குடும்பத்தினர் சமூக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர்.

கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரும் மொஹமட் அஷ்மன் ஷெரிப்டீன் என்பவரும் ஒரே நபர் அல்ல.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு மொஹம்மட் அஷ்மன் ஷெரிப்டீனின் குடும்பத்தினர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். சட்டத்தரணியின் கோரிக்கையைப் பரிசீலித்த நீதவான், கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இந்தக் கோரிக்கையை நீதிமன்றில் முன்வைக்குமாறு சட்டத்தரணிக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பேச்சுவார்த்தை...

அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதானி நிறுவனம் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் சிந்தித்தால் அதுதொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்பதுடன் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடுவதா இல்லையா என்பதை உறுதியாக கூற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (20) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய தேவைக்கேற்ப சாதாரண விலையின் அடிப்படையில் தேசிய வர்த்தகர்கள் அல்லது தேசிய முதலீட்டாளர்களிடமிருந்து சேவையை பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தொடர்பிலேயே ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் மின் கட்டணத்தை குறைத்துக்கொள்வது தொடர்பிலேயே கலந்துரையாடி வருகிறோம். அமைச்சரவையில் கூட அதானி நிறுவனத்தின் வேலைத்திட்டத்தை இரத்துச் செய்வதற்கு யோசனை முன்வைக்கவில்லை. மாறாக மின்னுக்கான கட்டணத்தை குறைப்பதற்கே கலந்துரையாடியிருந்தோம்.

அதானி நிறுவனத்தின் வேலைத்திட்டத்தினூடாக அந்த நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த 8.26 சத டொலரை மேலும் குறைப்பது தொடர்பிலேயே நாங்கள் கலந்துரையாடியிருந்தோம். குறைந்தது இந்தியாவில் வழங்கப்படும் விலைக்கு ஏற்ப மின் கொள்வனவு செய்ய முடியுமா என்பது தொடர்பிலேயே இதன்போது கவனம் செலுத்தினோம்.

ஆனால், இதுதொடர்பில் அதானி நிறுவனத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை. ஆகவே, இந்த வேலைத்திட்டத்திலிருந்து விலகுவதற்கு இது பிரதான காரணமாக அமைந்துள்ளது. அதனை விட குறைந்த விலையில் மின் உற்பத்தி செய்ய மேலுமொரு நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. நாட்டிலுள்ள பொருளாதார நிலைமைக்கமைய சாதாரண விலைக்கு எவ்வாறு மின்னை கொள்வனவு செய்வது என்பது தொடர்பிலேயே நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

அதானி நிறுவனத்தின் விலைகளினால் முதலீட்டாளர்கள் வெளியேறவில்லை. முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்கள். இந்த வேலைத்திட்டத்தில் முதலீடு செய்ய வரும் புதிய முதலீட்டாளர்கள் சாதாரண விலையில் மின்னை விநியோகிக்க ஒப்புக்கொண்டால் அதுதொடர்பில் கவனம் செலுத்துவோம்.

காற்றாலை வேலைத்திட்டத்தில் அதானி நிறுவனத்தை மீண்டும் உள்ளீர்ப்பது தொடர்பில் கலந்துரையாடுவதா இல்லையா என்பதை உறுதியாக கூற முடியாது. அவர்கள் எந்தளவுக்கு விலையை குறைக்க இணக்கம் தெரிவிக்கிறார்கள் என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த வேலைத்திட்டத்துக்கு மீண்டும் விலைமனுகோரல் வெளியிட இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

## உயர்வடைகிறது...

நாட்டின் அநேகமான பிரதேசங்களில் இன்றும் (21) வெப்பநிலை அதிகரிப்பை அவதானிக்க கூடியதாக இருக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்நிலையில் அதிக வெப்பம் நிலவும் காலப்பகுதியில் மாணவர்களை வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதை தவிர்க்குமாறு கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அதற்கமைய வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மாகாணங்களிலும் இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகரித்து காணப்படுமெனவும் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் நிலவும் வெப்பத்துடனான காலநிலையினால் திறந்த வெளியில் பணியாற்றுபவர்கள் என்றால் அதிகம் நீர் அருந்துதல் அவசியமென்றும் வீடுகளில் இருக்கும் முதியவர்கள் மற்றும் நோயாளர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், நிலவும் வெப்ப காலநிலையில் செயலாற்றவேண்டிய முறை தொடர்பில் சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையில், அதிக வெப்பம் நிலவும் காலங்களில் மாணவர்களை திறந்தவெளி அல்லது விளையாட்டு மைதான செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ளுதல், பாடசாலை ஓய்வு நேரங்கள் கடும் சூரிய ஒளி இருக்கும் திறந்தவெளி இடங்களில் ஓய்வு நேரத்தை கழித்தல் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடுவதை தவிர்த்துகொள்ளல், அதிக நீர் அருந்துதல் மற்றும் அதிக சோர்வை குறைத்துக்கொள்ள போதுமானளவு ஓய்வைப் பெற்றுக்கொடுத்தல், அதிக வெப்பம் இருக்கும் நேரங்களில் மாணவர்களை வெளியில் அழைத்துச் செல்வதை தவிர்த்துகொள்ளுதல், பிரதேசங்களில் இருக்கும் வெப்பநிலைக்கு ஏற்ப உள்ளக விளையாட்டு போட்டிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## வாய்ப்புற்றால்...

தெரிவிக்கையிலேயே வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஆண்களில் பரவும் புற்றுநோய்களில் வாய்ப்புற்றுநோய் முதலிடத்திலுள்ளது. இந்த வாய்ப்புற்றுநோயால் வருடாந்தம் 2000 முதல் 3000 பேருக்கும் அதிகமானவர்கள் புதிதாக பாதிக்கப்படுகின்றனர்.

இவர்களில் நாளொன்றுக்கு வாய்ப்புற்றுநோயால் 03 முதல் 04 பேர்வரை உயிரிழக்கின்றனர்.

வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னர் அதற்கான சகல அறிகுறிகளும் தென்படும். இதனால் முதல் நிலையிலே புற்றுநோயை கண்டறிய முடியும். அத்தோடு 100 க்கு 90 வீதம் வாய்ப்புற்றுநோயை கட்டுப்படுத்த முடியும்.

புகையிலை மற்றும் புகையிலையுடன் தொடர்புடைய உற்பத்திகளை பயன்படுத்தல், மதுபாவனை, பாக்கு மற்றும் பாக்குடன் தொடர்புடைய உற்பத்திகளை பயன்படுத்தல் மற்றும் பல வைரஸ் தொற்றாலும் இந்த வாய்ப்புற்றுநோய் பரவுகிறது.

இன்று பாடசாலை மாணவர்களிடையே புகைப்பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்களிடையே வாய்ப்புற்றுநோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகள் காணப்படுவதாகவும் வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாதாள...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (20) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்காக சிறிது காலம் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அவருடைய தலைமையில் இன்று பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

நீதிமன்ற வளாகங்களில் பாதுகாப்புத் தொடர்பில் இங்கு கருத்துத் தெரிவித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, இது தொடர்பில் முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்காலத்தில் சட்டத்தரணிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் சோதனையிடுவதற்கும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களுடன் கூடிய காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பில் இங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாடு முழுவதிலும் முப்படையினரின் பாவனையில் உள்ள காணிகள் தொடர்பில் மீண்டும் மதிப்பாய்வு மேற்கொண்டு காணிகளை விடுவிப்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இங்கு பதிலளித்தார்.

இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வணிகங்களை சுற்றுலாத் துறையில் மேலும் வினைத்திறன் மிக்க முதலீடுகளாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு வினவினர். இதற்கமைய, எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆய்வு நடத்தி, பொருளாதார நன்மைகளுக்காக அவற்றைப் பயன்படுத்துவது குறித்துத் தீர்மானிக்க முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சில வழிபாட்டு தலங்களை அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். மதவாதம் மற்றும் இனவாதம் என்பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி இங்கு தெரிவித்தார். இந்தப் பகுதியில் உள்ள மக்களின் உண்மையான தேவைக்கமைய இந்த சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்றும் குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குவதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், தேசிய அனர்த்தக் குழுவை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கான நடவடிக்கையை விரைவில் பூர்த்திசெய்யுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, பாதுகாப்பு பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருன ஜயசேகர (ஓய்வுபெற்ற), அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வுபெற்ற), முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள், பாராளுமன்ற பதவியணித் தலைமை அதிகாரியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## தேசிய பாதுகாப்புக்கு...

என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (20) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நீதிமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவத்துக்கு அரசாங்கத்தின் கவலையை தெரிவித்துகொள்ள விரும்புகிறோம். அண்மைய சில நாட்களாக திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. அதுதொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதுடன் சில மணி நேரங்களில் இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிதாரியாக கருதப்படும் சந்தேகநபரை கைதுசெய்யக் கூடியதாக இருந்தது.

மஹரகமவைச் சேர்ந்த சமிது தில்ஷான் பியுமங்க கதனராச்சி என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். புத்தளம், பாலாவி பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் கைதுசெய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அவர் பயணித்த வேனின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலுமொரு சந்தேகத்துக்கிடமான பெண்ணொருவர் தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவத்தினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலோ இடையூறோ ஏற்படவில்லை. இவை ஒவ்வொரு இடங்களிலும் இடம்பெற்று வரும் பாதாள குழுக்கள் அல்லது திட்டமிட்ட குற்றச்செயல்களில் இடம்பெறும் மோதல்களாகும். இது போன்ற சம்பவங்கள் நீண்ட காலமாக சமூகத்தில் இடம்பெற்று வருகின்றன.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்த அநேகமான காலப்பகுதிகளில் ஊடக நிறுவனங்களுக்கு தீ வைக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் வீதிகளில் வைத்து கொலை செய்யப்பட்டார்கள். அதேபோன்று பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். 10 -15 வருடங்களாகும் வரை சில கொலைச் சம்பவங்கள் தொடர்பிலான விடயங்களை அறிந்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் இந்தச் சம்பவம் இடம்பெற்றவுடன் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம்.

நேற்று கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த இருவார காலப்பகுதியில் இடம்பெற்ற சில கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, சம்பவம் இடம்பெற்றவுடன் அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதுபோன்ற ஓரிரு தனிச் சம்பவங்களை தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கருதவேண்டியதில்லை என்று அரசாங்கம் என்ற அடிப்படையில் நாங்கள் நம்புகிறோம். தேசிய பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. சில காலங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை பாதுகாக்கும் நடைமுறைகளே கையாளப்பட்டுள்ளன. ஆனால் இந்த அரசாங்கம் அப்படியொரு நிலைப்பாட்டில் இல்லை. யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை குறைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களின் பாதுகாப்பு அவ்வாறே வழங்கப்படுகிறது. நீதிமன்ற சுற்றுவட்டாரத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் நீதிமன்ற உள்ளக பாதுகாப்பு தனியார் பாதுகாப்பு பிரிவினர்களினாலேயே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நீதிமன்றத்துக்குள் பொலிஸார் ஆயுதங்களை கொண்டுச்செல்வதற்கு இடமளிக்கப்படுவதில்லை. இதுவே இந்த துரதிர்ஷ்ட சம்பவத்துக்கு பிரதான காரணமாகும். உயிரிழந்த சந்தேகநபரை சிறைச்சாலையிலிருந்து அழைத்து வரும்போது அவர்களுக்கு விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிலும் முக்கியஸ்தர்களின் பாதுகாப்பிலும் எந்த சிக்கலும் இல்லை என்றார்.

## எம்.பிக்களின்...

புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நீதிபதி முன்னிலையில் குற்றவாளிக் கூண்டில் இருந்த சந்தேக நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் என்ன செய்துகொண்டிருந்தார்கள்.

துப்பாக்கிதாரிக்கு நீதிமன்றத்தின் உள்ளக மட்டத்தில் தொடர்புகள் இருக்கலாம். இதனை அலட்சியப்படுத்த முடியாது. இச்சம்பவம் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். நீதிபதிகளின் பாதுகாப்பை குறைப்பதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். இதனை இல்லையென்று அவரால் குறிப்பிட முடியுமா?

நீதிபதிகளின் பாதுகாப்பை குறைத்தால் அவர்களால் எவ்வாறு அச்சமின்றி சுதந்திரமாக செயற்பட முடியுமா? படுகொலையாளிகள், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள குழுக்களுக்கு எதிராக எவ்வாறு தீர்ப்பளிக்க முடியும். ஆகவே தேசிய பாதுகாப்பை வாய்ச்சொல்லில் பலப்படுத்த முடியாது என்பதை அரசாங்கம் விளங்கிக் கொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது பாதுகாப்பு கிடையாது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுக் கொள்கிறது. ஆனால் நீதிமன்றத்துக்குள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஏதேனும் நேர்ந்தால் சபாநாயகர் அதன் பொறுப்பை ஏற்க வேண்டும். 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் ஏதும் கிடையாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவுத் திட்டம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி வெட்கமில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் முதலாளித்துவ கொள்கைக்கு சார்பானது என்பதால் புதிய லிபரல்வாதிகள் தற்போது மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். மக்கள் விடுதலை முன்னணி சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் இருந்து எதிர்த்த அனைத்து விடயங்களையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களில் இந்திய இராணுவம் எமக்கு வேண்டாம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவுக்கு எதிரான கடும் போக்கினை கொண்டு 1987ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் முறைமைக்கு எதிராக போராடியது. இதனால் இந்த நாட்டில் பாரிய விளைவுகள் ஏற்பட்டன.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் விவகாரத்தில் மக்கள் விடுதலை முன்னணி போராடியது. ஆனால் தற்போது திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை 50: 50 என்ற அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி என்பதொன்று தற்போது இல்லை. அவர்களுக்கு கொள்கை என்பதொன்றும் இல்லை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கையை தற்போது பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மாறாக பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தேசிய மக்கள் சக்தியின் கொள்கையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு ஆளுந்தரப்பினர் அளிக்கும் பதில் முறையற்றதாக உள்ளது - என்றார்.

## எஸ்.பி. சாமி...

சமூக மற்றும் சமயப் பணிகளில் எஸ்.பி. சாமி ஈடுபாடுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வயது மூப்பின் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு அவர் காலமானார் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

## யானை தாக்கி...

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றுள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொரவெவ - நாமல்வத்தை வீதியில் அமைந்துள்ள தனது குடியிருப்பு காணிக்குள் காட்டு யானை வந்தமையினால் அதனை விரட்ட முற்பட்டுள்ளார். அதன்போதே, யானை அவரை தாக்கியதாகவும் இதனையடுத்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த 15 வருடங்களாக பிரதேச சபையின் உப தவிசாளராகவும் உறுப்பினராகவும் பணியாற்றிவந்துள்ளார். இன நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கில் பாரிய சமூக செயற்பாட்டு திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளார்.

இந்நிலையில் காட்டு யானைகளின் தொல்லை தொடர்பிலும் யானை மின்வேலி அமைத்தல் தொடர்பிலும் பாரிய முன்னெடுப்புகளை முன்னெடுத்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உடற்கூற்று விசாரணையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மொரவெவ பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சாலிய ரத்னாயக்கவின் இறுதிக் கிரியைகள் நாளை (22) இடம்பெறவுள்ளன.

## ரயில்...

**(அநுராதபுரம் நிருபர்)**

கல்லோயா பிரதேசத்தில் வைத்து மீனகயா கடுகதி ரயிலில் மோதி ஆறு யானைகள் உயிரிழந்த சம்பவம் நேற்று அதிகாலை பதிவாகியுள்ளதுடன் இந்த விபத்தில் இன்னுமொரு யானை படுகாயங்களுக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தால் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் தடம் புரண்டுள்ளதுடன் மட்டக்களப்பு – கொழும்பு ரயில் வீதியின் போக்குவரத்து தற்காலிகமாக நேற்று இடைநிறுத்தப்பட்டிருந்தது.

கல்லோயா 141ஆவது ரயில் மைல்கல்லுக்கு அருகிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பிலிருந்து கொழும்பு பிரதான ரயில் வீதியில் அமைந்துள்ள 141ஆவது ரயில் மைல்கல்லுக்கு அருகில் கவ்டுள்ள காட்டுப்பகுதியிலிருந்து மட்டக்களப்பு கொழும்பு ரயில் வீதியை கடந்து சென்றுகொண்டிருந்தபோதே இந்த யானைகள் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் ஏழு யானைகள் அடங்கிய கூட்டத்தில் ஐந்து யானைகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் விபத்தினால் பாரதூரமான காயங்களுக்குள்ளான இரு யானைகளில் ஒன்று பின்னர் உயிரிழந்துள்ளது.

08, 15, 20 வயது நிரம்பிய யானைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவற்றில் ஐந்து யானைகள் பெண் யானைகள் என்றும் கவ்டுள்ள தேசிய பூங்காவின் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காயங்களுக்குள்ளான யானைக்கு விலங்கு வைத்தியர்கள் சிகிச்சை வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய, மட்டக்களப்பு - கொழும்பு ரயில் போக்குவரத்து ஹபரண, கல்லோயா வரையில் நேற்று மட்டுப்படுத்தப்பட்டது.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் தடம்புரண்டுள்ளதுடன் பயணிகள் எவருக்கும் எந்தவிதமான ஆபத்துகளும் ஏற்படவில்லையென விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பயணிகளின் நன்மை கருதி வேறு ரயிலில் கொழும்புக்கு செல்வதற்கான பயண ஏற்பாடுகளை ரயில்வே திணைக்கள அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு வரையான ரயில் சேவையினை வழமைக்கு கொண்டுவருவதற்காக தடம் புரண்ட ரயில் எஞ்சினை தண்டவாளத்தில் வைத்து வழமை நிலைக்கு கொண்டுவருவதற்காக ரயில் திணைக்களப் பணியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நீதிமன்றங்களுக்கு...

உடற்சோதனை, ஸ்கேன் இயந்திரங்கள் மூலமான பரிசோதனை, அடிக்கடி மோப்ப நாய்களின் உதவியில் தேடுதல், நீதிமன்ற விசாரணைகள் நடக்கும் இடத்தை அண்மித்த பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு போன்ற விடயங்கள் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன.

சட்டத்தரணிகள் சங்கத்துடனும் பேச்சு நடத்தி உடனடியாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட்டார் யாழ். நீதவான்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் உள்ள மனிதப் புதைகுழியை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஆனந்தராஜா நேற்று (20) பார்வையிட்டார்.

இதன்போது, சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா, நல்லூர் பிரதேச செயலர், யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ். தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸார் முறைப்பாட்டாளர் மற்றும் பலர் உடனிருந்தனர்.

அந்த எச்சங்கள் மனித எச்சங்களா என கண்டுபிடிப்பதற்கு, குறித்த பகுதியில் இருந்த எச்சங்கள் சேகரிக்கப்பட்டு விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன் குறித்த பகுதியை ஸ்கேன் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பகுதியில் 2011ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு அங்கு இராணுவத்தினர் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை, அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனித எச்சங்கள் வெளிவந்த நிலையில் அது குறித்து யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்க விடயம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த மயானத்தில் மனித எச்சங்கள் வெளிவந்தமை தொடர்பில் அறிய கிடைத்ததும் நாங்கள் சென்று பார்வையிட்டோம்.

அங்கு காணப்பட்ட எச்சங்களை பார்க்கும்போது எங்கிருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்ட எச்சங்களாக, பாகங்கள் கலக்கப்பட்டவையாக காட்சி தந்தன.



இந்நிலையில் யாழ்ப்பாண நீதிமன்றம் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியிருப்பது நம்பிக்கை தரும் நிலையில், தேவை ஏற்படின் சர்வதேச தரத்திலான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் யுத்த கால உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை கோர மாட்டோம். உள்ளக விசாரணைகளே இடம்பெறும் எனக் கூறிவரும் நிலையில், குறித்த புதைகுழி யுத்த காலத்தில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனித எச்சங்களாக இருக்கலாம் என நாம் சந்தேகிக்கிறோம்.

ஆகவே, குறித்த மனித புதைகுழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தற்போதைய அரசாங்கத்திடம் நாங்கள் கோரிக்கை முன்வைக்கிறோம் – என்றார்.


## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2025 மார்ச் மாதம் 14 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு**
**வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் பினான்ஸ்


## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மாசி மாதம் 09ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்:** புதிய தொழில் வியாபாரங்களை ஆரம்பித்தால் சிக்கல் உண்டு. செலவு செய்யும்போது சிந்தித்துச் செய்யுங்கள்.

**ரிஷபம்:** வாகனங்களால் அதிக சுகமும் இலாபமும் உண்டு. தொழில், வியாபார இலாபம், கௌரவம், செல்வாக்கு எல்லாமே சிறப்பாக அமையும்.

**மிதுனம்:** எதிரிகள் பணிந்து நடந்து கொள் வார்கள். கேட்ட உதவிகள் கிடைக்கும். சுயதொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு.

**கடகம்:** சரியான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடுவீர்கள். அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்காதீர்கள். தன நட்டம் உண்டு.

**சிம்மம்:** தூரப் பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. தொழில், வியாபாரம் அனைத் தும் மந்த கதியில் இயங்கும். மனக் குழப்பம் வேண்டாம்.

**கன்னி:** நல்ல முயற்சிகள் அனைத்தும் பலிக்கும் நாள். எதிர்காலத் திட்டங்களை நடை முறைப்படுத்துவீர்கள்.

**துலாம்:** உங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். யாரிடத்திலும் வீண் பேச்சு வேண் டாம்.

**விருச்சிகம்:** நீங்கள் விரும்பிய உணவு, படுக்கை அமையும். முக மலர்ச்சியுடன் சுறுசுறுப் பாக காணப்படுவீர்கள்.

**தனுசு:** ஆணவத்தால் அவமானமடைய வேண்டிவரும். பணத்தின் பெருமையை அறியும் நாள். மனதை கட்டுப்படுத்திக் கொள்க.

**மகரம்:** புதிய நண்பர்கள் தொடர்பால் புதிய உறவினை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**கும்பம்:** தேவைக்கேற்ப பணம் கிடைக்கும். உங்கள் கீழ் உள்ளவர்களை நம்பி எதையும் செய்யலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

**மீனம்:** சொத்துகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஆலய தரிசனம் செய்துகொண்டு தர்ம சிந்தனையுடன் செயலாற்றுங்கள்.

**திதி:** அட்டமி மு.ப.11.58 வரை பின் நவமி
**நட்சத்திரம்:** அனுஷம் பி.ப.3.53 வரை பின் கேட்டை
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** மரண யோகம்; முழுவதும்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரி யம் கூடாது
**நல்ல நேரம்:** காலை 6.25 – 9.25 மணிவரை
காலை 10.25 – 10.55 மணிவரை
பகல்1.25 – 3.25 மணிவரை மாலை
5.25 – 6.25 மணிவரை
**ராகு காலம்:** 10.55 – 12.25 மணிவரை
**எமகண்டம் :** 3.25 – 4.25 மணிவரை
**குளிகை :** 7.55 – 9.25 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 3.53 மணிவரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரி டம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 3.53 மணிக்குமேல்**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

**Tel No: - 0112 127 209**




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 பெப்ரவரி, 21ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# தேர்தல் தடுமாற்றம்!

தேர்தலுக்கு அச்சப்பட்டு எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடியுள்ளதாகவும் தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்பதே அவர்களின் விருப்பமாக உள்ளதென்றும் சாடியிருக்கிறார் மக்கள் விடுதலை முன்னணிச் செயலாளர் ரில்வின் சில்வா.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பேச்சுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் மேற்படி சாடல் வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் உயர்நீதிமன்றப் பரிந்துரைப்படி உரிய பெரும்பான்மையோடு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சபாநாயகரினால் சான்றளிக்கப்பட்டு சட்டமாகிவிட்டது. இதனால், உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்து நடத்தும் சுயாதீனமான அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு வந்துவிட்டது. தேர்தலை நடத்துவது தொடர்பான விடயத்தில் பந்து இப்போது தேர்தல் ஆணையகத்தின் களத்துக்குள். அதை எப்படி விளையாடுவதென்று தெரியாமல் தேர்தல் ஆணையகம் தடுமாறுவது வெளிப்படுகின்றது.

இப்போது வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் தினசரி நடைபெற்று வருகிறது. மார்ச் 21 வரை அது நீடிக்கின்றது. தாங்கள் வரவு-செலவுத் திட்ட விவாதங்களில் முழுமூச்சோடு பங்குபற்றுகின்றமையால் - தங்களின் அந்த ஜனநாயகக் கடமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் - அச்சமயத்தில் வேட்பு மனுத் தாக்கலுக்கான காலங்களை அறிவிக்க வேண்டாமென்று எதிர்க்கட்சிகளெல்லாம் ஒரே பிடியில் நிற்கின்றன. ஜனநாயக ரீதியில் அக்கோரிக்கையில் நியாயமிருப்பதை மறுக்க முடியாது.

இது தொடர்பில் எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்றாகச் சென்று தேர்தல் ஆணையகத்தைச் சந்தித்து தங்கள் கருத்தை நேரிலும் வலியுறுத்தியுள்ளன.

அதேசமயம், தேர்தலை உடனடியாகக் கிடைத்த வாய்ப்பில் நடத்துவதற்கான நடவடிக்கையை காலம் தாழ்த்தாது எடுக்கும்படி ஆளும் கட்சி, தேர்தல் ஆணையகத்தை வலியுறுத்துகின்றது. ஆளும் தரப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையகத்தை நேரில் சந்தித்து தனது இந்தக் கருத்தையும் வலியுறுத்தியிருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் உச்சம் பெற்ற ஆளும் தரப்பின் ஆதரவு - மக்கள் செல்வாக்கு - இப்போது சரியத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அது மோசமான கட்டத்தை அடைய முன்னர் தேர்தலை நடத்திமுடித்துவிடவேண்டுமென்பதில் மிக முனைப்பாக இருக்கிறது ஆளும் தரப்பு.

மறுபக்கத்தில் எதிரணிக் கட்சிகள் ஆளும் தரப்பின் செல்வாக்கு இயன்றளவு வீழ்ச்சியடைந்த சூழலில் தேர்தலை எதிர்கொள்ள விரும்புகின்றன. முடியுமான அளவு காலத்துக்குத் தேர்தலைத் தள்ளிப் போட்டால் அதுவரையில் - அதற்கிடையில் - ஆளும் தரப்பின் செல்வாக்கு கணிசமாகச் சரிந்துவிடும் என்பது எதிரணியின் நம்பிக்கை.

இந்த இரண்டு தரப்புகளினதும் வலியுறுத்தல்களுக்கு நடுவில் எதைச் செய்வதென்று தெரியாமல் தடுமாறுகின்றது சுயாதீன தேர்தல் ஆணைக்குழு.

இரண்டு பக்கக் கருத்துகளையும் செவிமடுத்துள்ள தேர்தல் ஆணையகம் இனி சுயாதீனமாக ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

தற்போது நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி, அடுத்த மூன்று மாத காலத்துக்குள் வேட்புமனுவை ஏற்பதற்கான ஒரு திகதியை தேர்தல் ஆணையகம் அறிவிக்க வேண்டும். அத்திகதியிலிருந்து உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பையும் விடுக்க வேண்டும்.

இந்த ஒழுங்கின்படி, எதிர்க்கட்சிகள் வலியுறுத்துமாற்போல மார்ச் 21இல் வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவுற்ற பின்னர், இத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையகம் கொடுக்க முடியும்.

அப்படித் தாமதித்தால் இந்தத் தேர்தல் மே அல்லது ஜூன் மாதத்துக்குத் தள்ளிப்போய்விடும். அதை எதிர்க்கட்சிகள் வரவேற்கின்றன. ஆளும் கட்சி அப்படித் தள்ளிப்போடுவதை எதிர்க்கின்றது.

எந்தத் தரப்பு, எதனை வலியுறுத்தினாலும் சுயாதீனமாக - சுதந்திரமாக - இவ்விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு உண்டு.

எதிர்க்கட்சிகள் தங்களுடைய பாராளுமன்றக் கடமையை - ஜனநாயகப் பொறுப்பை - ஆற்றுவதற்கு இடமளிக்கும் விதத்தில் தேர்தலைப் பிற்போடும்படி - அதுவும் சுமார் ஒரு மாதம் பிற்போடும்படி - கோருகின்ற போது, அதை நிராகரித்து, அவசரப்பட்டு தேர்தலை நடத்தும் முடிவை தேர்தல் ஆணையகம் எடுப்பது நியாயப்படுத்த முடியாத ஒரு முடிவாக வெளித்தோற்றும் என்பதும் கவனத்திற்கொள்ளத்தக்கது.

தேர்தல் ஆணையகம் நீதியாக நடப்பது மாத்திரமல்ல, நீதியாக நடப்பது போல காட்டவும் வேண்டும். அப்படிச் செய்வதாயின் அது ஆளும் தரப்பின் அழுத்தத்துக்கு இடம் கொடுக்காமல், சுயாதீனமாக முடிவெடுக்க வேண்டும்.

என்ன செய்யப்போகின்றது தேர்தல் ஆணையகம்? அடுத்து வரும் தினங்களில் அல்லது வாரங்களில் அதன் போக்கு அம்பலமாகும். எதிர்க்கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு அரசுக்கு ஏதோ ஒரு வகையில் கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.


அதனால்தான் தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் பயப்படுவதாக சொல்கிறார் ரில்வின் சில்வா. எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு சொல்வதுபோன்ற கருத்துகளை ஆளுங்கட்சிக்குள் இருந்து சொல்வது ஏற்புடையதல்ல. தேர்தல் ஆணைக்குழு இது விடயத்தில் சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

## இன்றைய நாளில்..

- 1803 – கண்டிப் போர்கள்: கண்டி மீது பிரித்தானியர் போர் தொடுத்தனர்.
- 1804 – நீராவியால் இயங்கிய முதல் ரயில் இயந்திரம் வேல்ஸில் இயக்கிப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.
- 1842 – தையல் இயந்திரத்துக்கான முதலாவது அமெரிக்கக் காப்புரிமத்தை யோன் கிரீனா பெற்றார்.
- 1848 – கார்ல் மார்க்ஸும் பிரெட்ரிக் எங்கெல்ஸும் பொதுவுடைமை அறிக்கையை வெளியிட்டனர்.
- 1947 – எட்வின் லாண்ட், பொலரய்ட் என்ற முதலாவது உடனடி படம்பிடிக் கருவியை நியூயோர்க் நகரில் காட்சிப்படுத்தினார்.
- 1952 – வங்காளமொழி இயக்கம்: கிழக்கு பாகிஸ்தானில் வங்காள மொழியை அதிகாரபூர்வ மொழியாக்கக் கோரி டாக்கா பல்கலைக்கழகத்தில் மாணவர் நடத்திய எழுச்சிப் போராட்டம் ஒன்றின்போது பொலிஸார் சுட்டதில் 4 பேர் கொல்லப்பட்டனர். இந்நாள் பின்னர் யுனெஸ்கோவினால் அனைத்துலக தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டது.
- 1960 – பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அனைத்து வியாபார நிறுவனங்களையும் அரசுடைமையாக்கினார்.
- 1972 – சோவியத்தின் ஆளில்லா லூனா-20 சந்திரனில் இறங்கியது.

# தனக்கென தனித்துவத்தை கொண்ட எஸ்.பி.சாமி

**வீரகத்தி தனபாலசிங்கம்**



"தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தில் என்னுடன் நெருக்கமாகப் பணியாற்றிய இருவருக்கு ஒரு பத்துநாள் இடைவெளியில் அஞ்சலிக் குறிப்புகளை எழுதவேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலை எனக்கு ஏற்பட்டது.

பெப்ரவரி 09 ஆம் திகதி யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் காலமான முன்னாள் ஞாயிறு தினக்குரல் ஆசிரியரும் நெருங்கிய நண்பனுமான பாரதி இராஜநாயகத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டுவிட்டு கொழும்புக்குத் திரும்பி இரு நாட்கள் கடந்து போவதற்கிடையில் கடந்த புதன்கிழமை (பெப்ரவரி 19) தினக்குரல் ஸ்தாபகர் எஸ்.பி. சாமி அதே திருநெல்வேலியில் காலமான துயரமிகு செய்தி வந்து சேர்ந்தது. அவருக்கு இறுதி மரியாதை செலுத்தவும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு வழியனுப்பவும் மீண்டும் யாழ்ப்பாணம் பயணமாகினேன்.

செல்லையா பொன்னுச்சாமி என்பது அவரது முழுப்பெயர். ஆனால், எஸ்.பி. சாமி என்றுதான் நாடும் சமூகமும் அவரை அறிந்து வைத்திருக்கிறது. எனக்கும் அவருக்குமிடையிலான ஏற்பட்ட உத்வேகமுமே அடிப்படைக் காரணங்கள் எனலாம்.

நான் முதலில் தினக்குரலில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றினேன். இராஜகோபால் எமது வழிகாட்டி. ஆறுமுகம் சிவனேசச்செல்வன் பிரதம ஆசிரியர். தினக்குரலின் முதலாவது இதழ் ஞாயிறு பத்திரிகையாக 1997 ஏப்ரல் 06 ஆம் திகதி வெளியானது. அதை வெளிக்கொணர்வதற்கு எமது குழாம் சில வாரங்களாகக் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது. பத்திரிகை வெற்றிகரமாக வெளிவந்ததால் மகிழ்ச்சியடைந்த போதிலும், ஆசிரியபீட உறுப்பினர்கள் சற்றுக் களைத்துப்போயிருந்தார்கள்.

மறுநாள் திங்கட்கிழமை தினசரிப் பத்திரிகையை வெளியிடுவதைத் தாமதித்து சில வாரங்களுக்குப் பிறகு தினசரியை வெளியிடுவோம் என்று ஆசிரியபீட உறுப்பினர்களில் சிலர் யோசனை கூறினார்கள். ஆனால், சாமி அதற்கு இணங்கவில்லை. திட்டமிட்டபடி திங்கட்கிழமை தினசரி தினக்குரல் வெளிவந்தேயாக வேண்டுமென்பதில் அவர் காட்டிய உறுதிப்பாடு சோர்வடைந்திருந்தவர்களைத் தட்டியெழுப்பியது. அச்சு இயந்திரப் பிரிவிலிருந்து தினசரிப் பத்திரிகையின் முதல் பிரதிகளை அவரே மகிழ்ச்சியுடன் எடுத்துவந்து ஆசிரிய பீடத்துக்குத் தந்தார்.

அலுத்துக்கொண்டவர்களும் உண்டு. கல்விமான்கள், எழுத்தாளர்களின் வீடுகளுக்கு என்னைக் கூட்டிச்சென்று அவர்களுடன் சாமி பேச வைத்த நாட்களையே இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

சாமியின் கல்விப்பின்புலம் வலுவானதாக இல்லாவிட்டாலும் கூட கற்றறிந்தவர்களுடனான அவரது சுலபமான ஊடாட்டம் எம்மைப் பிரமிக்கவைத்தது. சமூகத்தின் எந்த மட்டத்தவர்களுடனும் இலகுவாகப் பரிச்சயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வியக்கத்தக்க ஆளுமை அவரிடம் இருந்தது. இதை காலஞ்சென்ற பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்னிடம் நேரடியாகவே பல தடவைகள் கூறியிருக்கிறார். சமூகத்தில் பல

ஊடாட்டத்துக்கும் தினக்குரலுக்கும் ஒரே வயது. வடக்கிலும் தலைநகர் கொழும்பிலும் பிரபலமான ஒரு வர்த்தகப் பிரமுகர் என்ற வகையில் சாமியை நான் ஏற்கனவே அறிந்து வைத்திருந்த போதிலும், தினக்குரலை அவர் ஆரம்பித்திருக்காவிட்டால் அவருக்கும் எனக்குமிடையில் உறவுமுறை ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்திருக்காது.

வீரகேசரி வாரவெளியீட்டின் ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றிய காலஞ்சென்ற பொன். இராஜகோபால் மூலமாகத்தான் எனக்கும் சாமிக்கும் அறிமுகம் ஏற்பட்டது. தலைநகரில் தமிழ்ப் பத்திரிகையொன்றை ஆரம்பிக்கவேண்டுமென்ற எண்ணம் சாமிக்கு ஏற்கனவே இருந்திருந்தாலும், இராஜகோபாலுடனான சந்திப்பையடுத்தே அந்த எண்ணம் விரைவாக நடைமுறைச் சாத்தியமாவதற்கான வழிபிறந்தது எனலாம். தினக்குரலில் என்னைப் போன்றவர்களின் இணைவு இராஜகோபாலின் முயற்சியின் விளைவானது.

பத்திரிகையாளன் என்ற வகையில் எனது தொழில் வாழ்க்கைப் பயணத்தின் இடைநடுவில் சாமியைச் சந்தித்த நாள் தொடக்கம் அவர் எனக்கு இன்னொரு தந்தை. எனக்கு மாத்திரமல்ல, என்னைப் போன்று தினக்குரலில் பணியாற்ற வந்த இளையவர்களுக்கெல்லாம் அவர் தந்தை என்று கூறுவதே பொருத்தம். நெருக்கடிகள் ஏற்பட்ட வேளைகளிலெல்லாம் அவர் நிலைகுலையாமல் உறுதியுடன் நின்று, நாம் துவண்டுபோகாமல் வழிகாட்டிய பாங்கை இந்தச் சந்தர்ப்பத்தில் கண்கள் பனிக்க நினைத்துப் பார்க்கிறேன்.

ஏற்கனவே பல வருடங்கள் பத்திரிகைத்துறையில் பணியாற்றியவர்களைக் கொண்ட, ஒப்பீட்டளவில் இளவயதினரான பலரை உள்ளடக்கிய குழாம் ஒன்று அதன் எதிர்காலத்தை சாமியிடம் ஒப்படைத்த வண்ணமே தினக்குரலில் பணியாற்றத் தொடங்கியது. அக்குழாத்தினரில் சிலர் தங்களது எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ என்று கவலை கொள்ள ஆரம்பித்த வேளைகளிலெல்லாம் அவர்களுக்கு தைரியமூட்டுவதற்கு எமக்கு தெம்பைத் தந்தது சாமியின் மனஉறுதிதான்.

வர்த்தகத் துறையில் சாமி கைவைக்காத கிளையே இல்லை என்று கூறலாம். அச்சுத் துறையிலும் அவர் பெயரெடுத்தவராக விளங்கிய போதிலும், ஏற்கனவே பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில், இன்னொரு பத்திரிகையை ஆரம்பிப்பதென்பது அதுவும் உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த கடந்த நூற்றாண்டின் 90 களின் நடுப்பகுதியில் பாரிய சவால்மிக்க பணியாக இருந்தது. அந்தச் சவாலை துணிச்சலுடன் எதிர்கொண்டு கால்நூற்றாண்டைக் கடந்து தினக்குரல் பயணிக்கிறதென்றால் அதற்கு சாமி எமக்குத் தந்த ஊக்கமும் தைரியமும் அவற்றின் விளைவாக ஊழியர்களுக்கு

தினக்குரலின் உய்வின் சாத்தியம் குறித்து ஆரம்ப நாட்களில் பல்லி சொன்ன பலனுக்கு நாளடைவில் ஏமாற்றமே மிஞ்சியது. தலைநகரிலிருந்து வெளிவரும் இன்னொரு தமிழ்ப் பத்திரிகையாக தினக்குரல் தன்னைக் குறுகிய காலத்துக்குள்ளேயே நிலைநிறுத்தக் கூடியதாக இருந்தது. அதன் வளர்ச்சிக்காக ஸ்தாபகர் சாமி தொடக்கம் கடைநிலை ஊழியர் வரை கடுமையாக உழைத்ததைக் கண்ட சாட்சிகளில் ஒருவன் நான். பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை நடுநிசியிலும் சாமி அலுவலகத்துக்கும் அச்சு இயந்திரப் பகுதிக்குமிடையே இளைஞர்களே வியக்கும் வண்ணம் ஓடிக்கொண்டிருப்பார். ஆரம்பகட்டத்தில் பத்திரிகையை நாடுபூராவும் விநியோகிப்பதற்கான பணிகளில் அவரும் புதல்வர்களும் கூட முழுமூச்சாக ஈடுபட்டதைக் கண்டவன் நான். அவரின் குடும்பமே பத்திரிகையுடன் மாய்ந்தது.

ஒரு கட்டத்துக்குப் பிறகு தலைநகரிலிருந்து மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் தினக்குரலின் பிராந்தியப் பதிப்பு வெளியானது. குடாநாட்டை நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் வெளியுலகுக்கும் காட்டுவதற்கும் நாட்டின் ஏனைய பாகங்களையும் வெளியுலகையும் குடாநாட்டுக்கு காட்டுவதற்குமான ஒரு முயற்சியாக அமைந்த அந்தப் பிராந்தியப் பதிப்பு சாமியின் விடாமுயற்சியினால் வெற்றி கண்டது.

குடாநாட்டிலிருந்து பத்திரிகைகள் ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால், தலைநகரிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று அதன் குடாநாட்டுப் பதிப்பை முதன்முதலாக வெளியிட்ட சாதனையை நிகழ்த்தியது தினக்குரலேயாகும்.

அந்த வெற்றியின் பின்னால் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளினதும் ஊழியர்களின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான உழைப்பு இருந்ததென்ற போதிலும், இடர்பாடுகள் மிகுந்த குடாநாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் சாமி தந்த ஊக்கமே ஊழியர்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும், அவர் நிலைகுலையாமல் வெளிக்காட்டிய உறுதிப்பாடு எமக்கு நம்பிக்கையைத் தந்தது.

ஏழு வருடங்களாக செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய நான் சிவனேசச்செல்வன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் இதழியல் கல்லூரி விரிவுரையாளராகப் பதவியேற்றுச் சென்ற பின்னர் தினக்குரலின் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றேன். நான் தினக்குரலில் சுமார் 15 வருடங்கள் பணியாற்றினேன். அந்தக் காலப்பகுதியில் பத்திரிகைக்கு விடயதானங்களைப் பங்களிப்புச் செய்யக்கூடியவர்களை தேடிப்பிடிக்கும் பணியையும் செய்யவேண்டியிருந்தது. புதிய பத்திரிகைக்கு எழுதுவதால் என்ன பயன் என்று

தரப்பினரதும் மதிப்புக்குரியவராக சாமி விளங்கினார்.

ஆசிரிய பீடத்தின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு அவர் ஒருபோதும் இடையூறாக இருந்ததில்லை என்பதை ஒரு நீண்டகாலப் பத்திரிகையாளன் என்ற வகையில் வெளிப்படையாகக் கூறவேண்டியது எனது கடமையாகும். எமது சுயாதீனமான செயற்பாட்டுக்கு அவர் மேலும் உறுதுணையாக இருந்தாரென்றே கூறவேண்டும். வெளியார் சிலர் செய்த முறைப்பாடுகள் காரணமாக சாமிக்கும் நான் உட்பட ஆசிரிய பீடத்தின் மூத்த உறுப்பினர்களுக்குமிடையில் அவ்வப்போது உரசல் ஏற்பட்டாலும், அதை தனது தொழிற்றுறை அனுபவத்துடனும் முதிர்ச்சியுடனும் மிகவும் இலாவகமாகக் கையாள்வதிலும் முரண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதிலும் அவர் சமர்த்தர். அவர் ஈடுபட்ட சகல வர்த்தக முயற்சிகளினதும் வெற்றிக்கு அதுவே நிச்சயமான காரணமெனலாம்.

வெவ்வேறு துறைகளில் குறிப்பாக, தனியார் மருத்துவத்துறையில் முதலீடுகளைச் செய்வதில் நாட்டம் கொண்டிருந்த காரணத்தால் பிற்காலத்தில் சாமி தினக்குரலின் முகாமைத்துவத்தில் செய்த மாற்றம் எம்மில் பலரை எமது பத்திரிகைத் துறைத் தொட்டிலான வீரகேசரி வளாகத்துக்குள்ளேயே மீண்டும் கொண்டுபோய்விட்டது. தன்னை நம்பிவந்தவர்களின் எதிர்கால நலன்களை உறுதிசெய்யவேண்டுமென்பதில் அவர் காட்டிய அக்கறையை எம்மால் காணக்கூடியதாக இருந்தது. அது குறித்து பல்வேறு கருத்துகள் இருக்கின்ற போதிலும், தினக்குரலின் தொடர்ச்சியை புதிய நிர்வாகம் உறுதி செய்யுமென்ற நம்பிக்கை அதன் ஊழியர்களுக்கு வலுவாக இருக்கிறது.

சாமி வர்த்தகத்துறையுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டவர் அல்ல. வடக்கிலும் தலைநகரிலும் சமூக, சமய அமைப்புகள் பலவற்றின் தலைவராகவும் அவர் நீண்டகாலம் பயனுறுதியுடைய பணியைச் செய்துவந்திருக்கிறார். அரசியல் தலைவர்கள் பலருடனும் கூட நெருக்கமான பழக்கத்தைக் கொண்டிருந்த போதிலும், அரசியலில் ஒருபோதும் அவர் ஈடுபாடு காட்டியதில்லை. தினக்குரல் காரணமாக அரசியல்வாதிகளுக்கு அவர் வேண்டியவரானார்.

அவருடன் இருபது வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய அனுபவம் எனக்கு பல படிப்பினைகளைத் தந்திருக்கிறது. வர்த்தகத்துறையின் பல்வேறு கிளைகளிலும் அவர் கால்பதித்த போதிலும், பிற்காலத்தில் கைவைத்த பத்திரிகைத்துறையே தொழிற்றுறை அடையாளங்களில் அவருக்கு முக்கியமானதாக விளங்குகிறதென்பது அதில் அவருடன் பணியாற்றிய எமக்கு ஒருவித மனத்திருப்தியைத் தருகிறது.

இந்த உலகில் பிறந்தவர்கள் எல்லோரும் ஒருநாள் இறக்கத்தான் போகிறோம். மரணம் எவரையும் விட்டுவைக்கப்போவதில்லை. ஆனால், வாழும் காலத்தில் நாம் செய்கின்ற பணிகளின் மூலமாக, வாழும் முறையின் மூலமாக எத்தகைய மரபை விட்டுச் செல்கிறோம் என்பதே முக்கியமானது. அந்த வகையில் நோக்கும்போது சாமி வர்த்தகத்துறையிலும் சமூக சேவையிலும் வளமான மரபை விட்டுச் செல்கிறார். அது குறித்து அவரின் குடும்பத்தவர்கள் என்றென்றைக்கும் பெருமைப்படமுடியும்.

நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன்னர் என்று நினைக்கிறேன், சாமியை யாழ்ப்பாணம் நல்லூரில் செட்டித்தெருவிலுள்ள அவரது வீட்டில் சென்று சந்தித்துப் பேசினேன். அதற்குப் பிறகு அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையென்பது துரதிர்ஷ்டவசமானது. ஆனால், மீண்டும் அவரது வீட்டுக்கு அவருக்கு இறுதிமரியாதை செலுத்துவதற்கே செல்லப்போகிறேன் என்பதை கனத்த மனதுடன் நினைத்துக் கொள்கிறேன். அவர் முழுமையான ஒரு வாழ்வை வாழ்ந்தவர். அவரை இழந்து வாடும் மனைவி வீரலட்சுமி அம்மையாருக்கும் அவர்களது புதல்வர்கள், புதல்விகள் உட்பட குடும்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நான் எழுதுவதற்கு ஒரு பத்திரிகையை வெளியிட்ட சாமி ஐயாவுக்கு இறுதியில் பத்திரிகைகளில் அஞ்சலிக்குறிப்பை எழுதிக் கொண்டிருக்கிறேன். மரணமடைவதை பெரும்பான்மையானவர்களுடன் இணைவதாக (Joining the majority) கூறும் முதுமொழி ஒன்று இருக்கிறது. உலகில் வாழ்பவர்கள் அல்ல, காலமானவர்களே பெரும்பான்மையினர். சாமி ஐயா பெரும்பான்மையுடன் இணைந்துவிட்டார். நாங்கள் தான் சிறுபான்மையினர்.

சமூகத்தில் எனக்கு ஏதாவது அடையாளம் இருக்குமானால் அதற்கு காரணமானவர்களில் சாமியும் ஒருவர். சென்றுவாருங்கள் சாமி ஐயா! உங்களை நினைத்துக் கொண்டிருப்பதை தவிர எங்களால் என்ன செய்யமுடியும்!

## நக்கல் நமசிவாயம்

தகவல் கிடைத்தும் நடவடிக்கை எடுக்காமல் ஈஸ்ரர் தின தாக்குதலுக்கு வழிவிட்ட ஆட்கள் இப்போ தேசிய பாதுகாப்பை பற்றி கவலைப்படுறாங்க..



# எட்டு வருடங்களை நிறைவு செய்த கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டம்




கே.குமணன்

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றிலில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சியில் கடந்த 2017ஆம் ஆண்டு இதே நாளில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் நேற்று (20) எட்டாவது வருடத்தை நிறைவுசெய்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வடக்கு - கிழக்கு இணைந்த அனைத்து உறவுகளும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பிக்கப்பட்டு டிப்போ சந்திவரை நீதி மற்றும் உண்மையின் வடிவமாக தீச்சட்டியை ஏந்தியவாறு பேரணியாக சென்றடைந்தனர்.

குறித்த போராட்டம் நேற்று இடம்பெற்றுள்ளது. இதன்போது, "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்கள் கடந்த நிலையில் எம்மால் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் எமது பிள்ளைகளை இதுவரையில் ஒருமுறையாவது பார்க்க மாட்டோமா என எண்ணி காத்திருந்து 08 வருடங்கள் நிறைவடைந்து ஒன்பதாவது வருடம் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலும் எவராலும் எமக்கான தீர்வு இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை எவரும் கூற முன்வரவில்லை.

ஆட்சி பீடம் ஏறும் ஜனாதிபதிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற போது எமக்கான தீர்வு கிடைக்கப்பெறும் வழங்கப்படும் என வாக்குறுதிகளை மாத்திரமே அள்ளி வழங்கி வருகின்றனர். எமக்கான தீர்வு இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. எமக்கு உள்நாட்டு பொறிமுறை எவற்றிலும் நம்பிக்கை இல்லை சர்வதேச தலையீடுடனான நீதி விசாரணையை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

எமது பிள்ளைகளை உறவுகளை தேடி பல தாய் தந்தையர் உறவுகளும் இறந்துபோயுள்ளனர். எமக்கான தீர்வை சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும்" என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# குழந்தையின்மைக்கு சிகிச்சையளிக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

## அனைத்து வைத்தியசாலைகளுக்கும் சுகாதார அமைச்சு ஆலோசனை



IVF மற்றும் குழந்தையின்மை சிகிச்சையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளுக்கான வழிகாட்டுதல்கள், சுகாதார அமைச்சின் தாய் மற்றும் குழந்தை சுகாதார இயக்குநர், நிபுணர் டாக்டர் சந்திம சிறிதுங்கவால், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் சமீபத்தில் சுகாதார அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டன.

இந்த வழிகாட்டுதல்களை மருத்துவமனைகள் மற்றும் கருவுறாமைக்கு சிகிச்சையளிக்கும் அனைத்து சுகாதார நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும். மேலும் சிகிச்சைபெற விரும்பும் நோயாளிகளுக்கு சிறந்த தரமான சுகாதார சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றும் நிறுவனங்கள், நோயாளிகளுக்கு உண்மைத் தகவல்களை வழங்கவும் மருத்துவ நெறிமுறைகளைப் பின்பற்றவும் பாதுகாப்பான சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தவும் பக்க விளைவுகளை நிவர்த்திசெய்யவும் கடமைப்பட்டுள்ளன.

பல மேற்கத்தேய மற்றும் ஆசிய நாடுகள் குழந்தை இன்மைக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களை ஒழுங்குபடுத்த நிறுவனங்களை நிறுவியிருந்தாலும் அத்தகைய நிறுவனம் நிறுவப்படாத நம் நாட்டில் சுகாதார அமைச்சகம் அத்தகைய வழிகாட்டுதல்களை வெளியிடுவது மிகவும் சிறப்பானதாகும்.

இந்நிகழ்வில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (தாய் மற்றும் குழந்தை சுகாதாரம்) டாக்டர் சந்திம சிறிதுங்க, கொழும்பு மருத்துவ பீடத்தின் மூத்த பேராசிரியர் (மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல்) அதுல கலுஆராச்சி, இலங்கை மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் நிபுணர் சங்கத்தின் தலைவர் டாக்டர் சனத் அக்மீமன, கருவுறாமை நிபுணர் டாக்டர் மில்ஹான் பச்சா, ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் துறையின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் சமிந்த ஹுனுகும்புர மற்றும் குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக சுகாதார நிபுணர் டாக்டர் லோஷன் முனசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மத்திய மாகாண ஆளுநர் - அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கு இடையே சந்திப்பு

எம்.ஏ.அமீனுல்லா

மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ்.அபயகோன் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (19) கண்டியில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர விவகாரங்கள், தற்போதைய அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் குறிப்பாக நாட்டினதும் மத்திய மாகாணத்தினதும் கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களும் மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சுற்றுலாத்துறை மற்றும் விவசாயம், விலங்கு உற்பத்தி, கால்நடை ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கு ஆதரவை வழங்குவதில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களும் இங்கு ஆராயப்பட்டன.

இந்தச் சிநேகபூர்வ சந்திப்பை அடையாளப் படுத்தும் வகையில், மத்திய மாகாண ஆளுநர் அபயகோன் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கு நினைவுப் பரிசை வழங்கி வைத்தார்.



இதன்போது உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி கிறிஸ்டினா ஸ்டீபன்ஸ், மத்யூ லார்ட், மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் மஞ்சுள மதஹபொல, ஆளுநரின் உதவிச் செயலாளர் சாமர அழககோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அந்தனி ஜீவாவுக்கு அஞ்சலி நிகழ்வு

மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் ஏற்பாட்டில் மறைந்த மலையக கலை இலக்கிய பேரவையின் செயலாளரும் 'கொழுந்து' கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியருமான மலையக மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் அந்தனி ஜீவாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 02 மணிக்கு நட்சத்திரப்பேரவையின் தலைவர் கலைஞர் மலையக வாசுதேவனின் தலைமையில் புசல்லாவை இந்து தேசிய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற ஏற்பாடாகியுள்ள மேற்படி நிகழ்வுக்கு சிறப்பு அதிதிகளாக அந்தனி ஜீவாவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணிவந்த சக எழுத்தாளர் நண்பர்களான கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் தினக்குரல் பத்திரிகையின் கண்டி கிளை முன்னாள் முகாமையாளர் எழுத்தாளர் இரா.அ.இராமன், கொத்மலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், கொத்மலை நல்லிணக்க குழு மற்றும் கொத்மலை பொலிஸ் பிரஜைகள் குழு ஆலோசனை சபை ஆகியவற்றின் உபதலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அகில இலங்கை சமாதான நீதவானுமான துரைசாமி நடராஜா, மலையகத்தின் மூத்த பெண் எழுத்தாளர் கவிஞர் புசல்லாவ ஸ்மாலிகா உட்பட பிரதேச பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், கலை இலக்கியவாதிகள், ஊடகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




# 2025-02-19ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள்

**01. கல்வி ஒத்துழைப்புக்காக கொழும்பு பல்கலைக்கழக மற்றும் கொரிய குடியரசின் தேசிய கொரிய சமுத்திரவியல் மற்றும் சமுத்திர பல்கலைக்கழகத்துக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை செய்தல்.**

கல்வி மற்றும் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்து பயிற்சிப் பட்டறைகள் மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தலை குறிக்கோளாக கொண்டு, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கொரிய குடியரசின் தேசிய கொரிய சமுத்திரவியல் மற்றும் சமுத்திர பல்கலைக்கழகம் ஆகியவற்றுக் கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கையின் கருமங்களின் அடிப்படையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு உரியதாக அமுல்படுத்துவதற்கு இருதரப்பும் உடன்பாடு எட்டியுள்ளது. அதற்கமைய ஐந்து ஆண்டுகள் (05) காலப்பகுதிக்காக செல்லுபடியாகும் வகையில் உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கை, இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கொரிய குடியரசின் தேசிய கொரிய சமுத்திரவியல் மற்றும் சமுத்திர பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடு வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**02. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயன் முறையுடன் தொடர்புடைய ஹங்கேரிய ஏற்றுமதி கடன் காப்புறுதி தனியார் கம்பனி மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுக்கிடையிலான கடன் மறுசீர மைப்பு தொடர்பான உடன்படிக்கை**

2022 ஏப்ரல் மாதத்தில் இலங்கை அரசி னால் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு அரச கடன்களுக்காக கடன் செலுத்துகை கைவிடப்படும் இடைக்காலக் கொள்கை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், அரச கடன் உறுதித்தன்மையை அடைவதற்காக கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், தற்போது உள்நாட்டு கடன் சீராக்கல் செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வெளி நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உத்தியோகபூர்வ கடன் கொடுத்தோர் குழுவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது. மேற்சொல்லப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கமைய வெளிப்படைத்தன்மை மற்றும் ஒப்பீட்டு ரீதியான தன்மையை உறுதிப்படுத்தி ஏனைய தொடர்புடைய நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கமைய ஹங்கேரிய ஏற்றுமதி கடன் காப்புறுதி தனியார் கம்பனி மற்றும் இலங்கை அரசு ஆகியவற் றுக்கிடையிலான கடன் மறுசீரமைப்பு தொடர் பான உடன்படிக்கையில் கையெழுத்திட திட்டமிடப் பட்டுள்ளது. நிலுவைக் கடன் மீளாய்வு ஊடாக கடன் சலுகையை வழங்குவதற்கு ஹங்கேரிய ஏற்றுமதிக் கடன் காப்புறுதி தனியார் கம்பனி உடன்பாடு தெரிவித்துள்ளதுடன், அவ்வாறு மீளாய்வு செய்யப்படும் அனைத்து கடன்களும் மேற்குறித்த உத்தேச உடன்படிக்கையில் உள்ள டங்கும். உத்தேச உடன்படிக்கைக்கு சட்ட மா அதிபர் தனது ஒப்புதலை வழங்கியுள்ளார். அதற்க மைய, ஹங்கேரிய ஏற்றுமதி கடன் காப்புறுதி தனியார் கம்பனியுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கை செய்வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**03. முன்னோடி கருத்திட்டமாக கொரியக் குடியரசின் பருவகால ஊழியர் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.**

கொரிய அரசு தமது விவசாய மற்றும் மீன்பிடி துறைகளில் பருவகால ஊழிய பற்றாக்குறையை தீர்ப்பதற்காக e-8 விசா வகுதியின் கீழ் பருவகால ஊழியர் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம், கொரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு குறுங்கால அடிப்படையில் வெளிநாட்டு ஊழியர்களை சட்ட ரீதியாக ஆட்சேர்ப்பு செய்வதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் இருதரப்புக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக கொரிய குடியரசின் மாகாண மற்றும் நகரசபையால் (மாநில) சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தகைமை பெறும் இலங்கை தொழிலாளர்கள் மேற்சொல்லப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆகக்கூடியது மூன்று ஆண்டு காலத்தில் மூன்று தடவைகள்வரை பணியாற்றக்கூடிய வகையில் முன்னோடி கருத்திட்டத்தை ஒருங்கிணைந்து அமுல்படுத்துவதற்காக கொரிய குடியரசின் மாகாண மற்றும் நகரசபையுடன் (மாநில) புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெ ழுத்திடுவதற்கும் முன்னோடி கருத்திட்டத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுப்பதற்கும் வெளிவிவகார, வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**04. தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கலுக்கான போட்டி**

இலங்கை 1966ஆம் ஆண்டில் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் உறுப்புரிமையை பெற்ற பின்னர் தேசிய உற்பத்தித்திறன் அமைப்பு நிறுவப்பட்டுள்ளதுடன், அமைப்பின் கருமங்களை மேலும் விரிவுபடுத்துவதற்காக 1994ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் நிறுவப்பட்டுள்ளது. தரம், உற்பத்தித்திறன் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான சிறந்த பழக்கங்களைப் பின்பற்றுவதற்கு நிறுவனங்களை ஊக்குவித்தல், தேசிய நோக்கு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இசைவாக்கமடைந்து பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரச நிறுவனங்களை ஈடுபடுத்துதல், முன்மாதிரியான நிறுவனங்களை இனங்காணுதல், தேசிய மட்டத்தில் பாராட்டுதல் மற்றும் வளங்களை சிக்கனமாக பாவிப்பதன் மூலம் பேண்தகு அபிவிருத்திக்கான எதிர்கால உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு அரச நிறுவனங்களை தயார்படுத்துதல் போன்ற குறிக்கோளுடன் 2003ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கல் போட்டி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை 10 தடவைகள் மேற்குறித்த போட்டி நடத்தப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டின் பின்னர் மேற்குறித்த போட்டி நடத்தப்படவில்லை. தற்போதைய அரசின் 'Clean Sri Lanka' தேசிய திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்கான தந்திரோபாய கருவியாக 2025 / 26 ஆண்டு தொடக்கம் தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கல் போட்டியை பாடசாலை, அரச, உற்பத்தி மற்றும் சேவைகள் ஆகிய பிரதான துறைகளில் நடத்துவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**05. துன்புறுத்தல்களால் பாதிக்கப்படும் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான தற்காலிக பாதுகாப்பு இல்லங்களின் நிர்வாகம்.**

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளால் துன்புறுத்தல்களுக்குள்ளாகி பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு தற்காலிக பாதுகாப்பை வழங்குதல் அரசினால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பாகும் என கருதப்படுகிறது. அதற்கமைய, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் 10 மாவட்டங்களில் பாதுகாப்பு இல்லங்கள் இயக்கப் படுவதுடன், பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து மேற்குறித்த இல்லங்களின் செலவுகள் மேற்கொள்ளப்படுகிறது. 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நுவரெலியா மாவட்டத்திலும் புதிய பாதுகாப்பு இல்லம் நிறுவப்பட்டுள்ளது. மேற்குறித்த தற்காலிக பெண்களுக்கான பாதுகாப்பு இல்லத்தையும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து இயக்கும் பாதுகாப்பு இல்ல வலையமைப்பில் இணைப்பதற்காக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**06. திருகோணமலை சம்பூரில் 50 மெகாவோட் (கட்டம் I) மற்றும் 70 மெகாவோட் (கட்டம் II) சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுதல்.**

இரண்டு அரசுகளுக்கிடையில் மேற்கொள்ளப் படும் திட்டமாக இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின்சார கூட்டுத்தாபனத்தின் கூட்டு தொழில்முயற்சி கம்பனியாக நிர்மாணித்தல், உரிமை வகித்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் திருகோணமலை சம்பூரில் 50 மெகாவோட் (கட்டம் I) மற்றும் 70 மெகாவோட் (கட்டம் II) சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்காக இலங்கை அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுக்கிடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. திருகோணமலை சம்பூரில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் கூட்டு தொழில்முயற்சி கம்பனியாக நிறுவப்பட்ட Trincomalee Power Copany Ltd மூலம் உத்தேச 50 மெகாவோட் மின்னுற்பத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச திட்டத்தை அமுல்படுத்துவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**07. காலி நகரத்தில் நீர் வழங்கல் திட்டங்களில் வருமானம் ஈட்டப்படாத நீர் நுகர்வைக் குறைத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக தனியார் துறையின் பங்கேற்புடன் முன்னோடித் திட்டத்தை அமுல்படுத்தல்**

காலி நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் தற்போது 28,000 நீர் நுகர்வோருக்கு சேவை வழங்கப்படுவதுடன், நீர் வழங்கல் போதாமை காரணமாக புதிய இணைப்புகளை வழங்குதல் கைவிடப்பட்டுள்ளது. புதிய நீர் இணைப்புகளை பெறுவதற்காக 5,400 பாவனையாளர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். மேற்குறித்த தேவையை நிறைவேற்றுவதற்காக புதிய நீர் வழங்கல் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அல்லது அரசுக்கு தற்போது இயலுமை இல்லை. எனவே தற்போது 45 வீத மட்டத்திலுள்ள வருமானம் பெறாத நீர்ப்பாவனை மட்டத்தை 15 வீதம்வரை குறைத்து, அதற்கமைய எஞ்சியுள்ள நீரிணைப்பு பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கும் வகையில் தனியார் துறையின் பங்குபற்றுதலுடன் செயலாற்றுகையை அடிப்படையாக கொண்ட ஒப்பந்தம் ஊடாக முன்னோடித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உத்தேசித்துள்ளது. உத்தேச முன்னோடித் திட்டத்துக்குத் தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்காக 1.28 மில்லியன் அமெரிக்க டொலர் அளிப்பை வழங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மேற்குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**08. 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வர்த்தக பண்ட வரிச் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவி திகளை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.**

பொதுமக்களின் நன்மைக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் சந்தை விலைகளை நிலையாக பேணுதல் மற்றும் உள்நாட்டு விவசாயிகளுக்கு வசதிகளை வழங்கும் அரசின் கொள்கை ரீதியான தீர்மானங்களை அமுல்படுத்தும் செயன்முறையை தொடர்ச்சியாக பேணுவதற்கும் ரமழான் பண்டிகைக்காக நன்கொடையாக நாட்டுக்கு கிடைக்கும் பேரீச்சம்பழத்துக்கு வரிச் சலுகை வழங்குவதற்காகவும் 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வர்த்தக பண்ட வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள பின்வரும் ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**09. 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாரா ளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.**

1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் பின்வரும் அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள மோட்டார் வாகன இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த தற்காலிக இடைநிறுத்தங்களை படிப்படியாக நீக்குதல் தொடர்பான ஒழுங்குவிதிகளுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியது.

**10. 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க குற்றவியல் வழக்கு நடைமுறை கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்**

2013 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க குற்றவியல் வழக்கு நடைமுறை கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் விசாரணை நடத்துதலை இலகுபடுத்துவதற்காக பிடியாணை இன்றி சிறை வைக்கப்பட்டுள்ள நபர்களை தடுத்து வைத்திருக்கும் காலப்பகுதியை நீடிப்பதற்காகவும் சில வழக்குகளில் சுருக்க முறையற்ற விசாரணைகளை நடத்துவதனை தவிர்ப்பதற்காகவும் முறைப்பாட்டுத் தரப்பு சாட்சியாளர்களின் உறுதிமொழி சாட்சி வழங்குவதற்காகவும் அதனுடன் தொடர் புடைய விடயங்களுக்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டம் அமுலாகும் தினத்திலிருந்து 02 ஆண்டு காலத்துக்கு செல்லுபடியாகும். மேற்குறித்த சட்டத்தின் 7ஆவது பிரிவின் (2) ஆவது உபபிரிவுக்கமைய, வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒழுங்குவிதி மூலம் நீதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரால் சட்ட அமுலாக்கத்தை மேலும் நீடிக்கலாம். அதற்கமைய மேற்குறித்த சட்ட அமுலாக்கம் இதுவரை அவ்வப்போது நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்குதல் 2025.02.02 திகதி தொடக்கம் மேலும் 02 ஆண்டு காலத்துக்கு நீடித்து 2418/28 இலக்க 2025-01-08 திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**11. பயங்கரவாத முறியடிப்புக்கான விரிவான சட்டத்தை அறிமுகம் செய்தல்**

தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் சமாதானம் தொடர்பில் குறித்த காலத்தில் நிலவிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பதற்காக 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் 2022ஆம் 12ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்த) சட்டம் என்ற ரீதியில் குறித்த சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, தேசிய பாதுகாப்பு தொடர்பான விரிவான சட்டத்தை பிரகடனப்படுத்துவதற்கான இடைக்கால நடவடிக்கை பின்பற்றப்பட்டுள்ளது. அதன் பின்னர் பயங்கரவாதத்தை முறியடித்தல் தொடர்பான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மேற்குறித்த சட்ட வரைவு உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்குறித்த சட்டவரைவில் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை இனங்கண்டு குறித்த திருத்தங்களை உள்ளடக்கி சட்ட வரைஞரால் திருத்த சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இறுதி வரைவு தொடர்பாக மேலும் விடயங்களை ஆய்வுசெய்து மேற்குறித்த சட்ட வரைவை மேலும் மேம்படுத்துவதற்காக பொருத்தமான யோசனைகளை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன தலைமையிலான குழுவை நியமிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.






## சவூதி அரேபிய ஸ்தாபக தினம் (நாளை 22 பெப்ரவரி)

# உலக சமாதானத்தின் தூதுவராக சவூதி அரேபியா



## சவூதி அரேபியாவின் 'ஸ்தாபக தினம்'என்றால் என்ன?

சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினம் என்பது அந்நாட்டின் மிக முக்கியமான தேசிய நிகழ்வுகளில் ஒன்றாகும்.

இந்நாளில், 1727ஆம் ஆண்டு இமாம் முஹம்மது பின் ஸுஊத் அவர்கள் நிறுவிய முதல் சவூதி அரசின் ஆரம்பம் நினைவுகூரப்படுகிறது. இது இன்றுவரை சவூதி அரேபியாவை உருவாக்கும் பயணத்தின் முதல் அடிக்கல்லாகும்.

இச்சிறப்புமிக்க நிகழ்வை கொண்டாடும் பொருட்டு, ஆண்டுதோறும் பெப்ரவரி 22ஆம் திகதி உத்தியோகபூர்வ விசேட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை சவூதி அரேபியாவின் இந்நாள் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸுஊத் அவர்கள் 2022 ஜனவரி 27ஆம் திகதி வெளியிட்டார்கள்.

இந்நாளில் தான் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் தலைமையில் ரியாத் இல் அத்-திர்யியா எனும் ஊரில் சவூதி ஆட்சி உருவாக்கப்பட்டது. இதன்மூலம் சவூதி அரச குடும்பத்தின் ஆட்சிக்கான அடிப்படை அமைக்கப்பட்டு நாட்டின் ஒற்றுமை, அமைதி ஆகியவற்றுக்கு வித்திடப்பட்டது.

ஸ்தாபக தினம் மற்றும் தேசிய தினம் (செப்டெம்பர் 23) இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நோக்கின்,
ஸ்தாபக தினம் 1727ஆம் ஆண்டில் முதல் சவூதி அரசு உருவானதை குறிக்கிறது.

தேசிய தினம் 1932ஆம் ஆண்டில் சவூதி அரேபியா ஒரு ஒற்றை நாடாக இணைக்கப்பட்டதை நினைவுகூருகிறது.

குறிப்பாக சவூதி அரசின் தோற்றம், வளர்ச்சி வரலாற்றில் மூன்று முக்கிய கட்டங்களை கடந்துள்ளது.

01. முதலாம் சவூதி அரசு (1727 – 1818)
இமாம் முஹம்மத் பின் ஸுஊத் அவர்கள் 1727ஆம் ஆண்டு திர்யியாவில் இந்த அரசை உருவாக்கினார்கள். ஆயினும், 1818ஆம் ஆண்டு உத்மானிய பேரரசின் படையெடுப்பில் இது வீழ்ந்தது.

02. இரண்டாம் சவூதி அரசு (1824 – 1891)
1824ஆம் ஆண்டு, இமாம் துர்க்கி பின் அப்துல்லாஹ் ஆல் ஸுஊத் மறுபடியும் அரசை நிறுவினார்கள்.
இது 1891ஆம் ஆண்டு, ஆல் ரஷீத் குடும்பத்தினரால் வீழ்த்தப்பட்டது.

03. மூன்றாம் சவூதி அரசு (1902 – இதுவரை)
1902ஆம் ஆண்டு, மன்னர் அப்துல் அஸீஸ் ஆல் ஸுஊத் அவர்கள் ரியாத் மாநகரை மீண்டும் கைப்பற்றி, சவூதி அரேபியாவின் ஆட்சியை மீட்டெடுத்தார்கள்.

பின்னர் 1932ஆம் ஆண்டு, சவூதி அரேபியா என்ற பெயரில் நாடு ஒற்றுமைப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து தனது தனித்துவமான பயணத்தை ஆரம்பித்து இன்றுவரை தொடர் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் கண்டுவரும் சவூதி அரேபியா, இன்று சர்வதேசத்துக்கும் முஸ்லிம்களுக்கும் ஒப்பற்ற பணிகளை முன்னெடுத்து வருகின்றது என்றால் மிகையாகாது.

சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினம் என்பது ஒரு முக்கிய தேசிய நிகழ்வு மட்டுமன்றி, ஒரு பாரம்பரிய அடையாளமாகவும் பார்க்கப்படுகிறது. இது சவூதி மக்களின் ஒருமைப்பாடு, வரலாறு, மற்றும் கலாசாரத்தை பிரதிபலிக்கும் நாள் ஆகும்.

நம் தாய் நாடான இலங்கையும் சவூதி அரேபியாவுடன் பல தசாப்தங்களாக இராஜதந்திர உறவை வெற்றிகரமாக பேணி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அண்மையில், இலங்கைத் தூதரகம் சவூதி அரேபியாவில் 50 வருட இராஜதந்திர உறவை நினைவுகூர்ந்து கொண்டாடியது.

இந் நாளில், சவூதி நாட்டுக்கும் மக்களுக்கு எம் இனிய வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்!!!

**எம்.எம்.எம்.மன்சூர்,**
**(பிரதி அதிபர்)**
**மஃஹதுஸ் ஸுன்னா அந் நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரி,**
**காத்தான்குடி.**

## நவீன தொழில்நுட்பத்தில் தடம் பதிக்கும் சவூதி அரேபியா



சவூதி அரேபியா அதன் ஸ்தாபகத்தின் ஆரம்பம் முதல் ஸ்தீரமானதும் மிகவும் பலமானதுமான தொழில்நுட்ப வளர்ச்சியை தன்னகத்தே ஆக்கிக்கொண்டது. சவூதி அரேபியா சகல துறைகளிலும் கட்டம் கட்டமாக முன்னேற்றமடைந்து தற்பொழுது உலகில் தொழில்நுட்ப ரீதியில் மிகவும் வளர்ச்சியடைந்து வருகின்ற நாடாக மாறிவருகின்றது. மத்திய கிழக்கில் அரசியல் பலமிக்க நாடாக திகழும் அதே சந்தர்ப்பத்தில் தனித்துவமிக்க பல நவீன கண்டுபிடிப்புகளுக்கும் உரிமை கூறுவதோடு பல சவால்களுக்கும் முகம் கொடுத்து அவற்றை வெற்றிகரமாக எதிர்நோக்கி தற்பொழுது சிறப்பான முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

சவூதி அரேபியா சமீபத்தில் தொழில்நுட்பத் துறையில் அதிக கவனம் செலுத்தியுள்ளது. ஏனெனில், சவூதி இராச்சியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்கால விஷன் 2030இல் முக்கிய இலக்கை அடைய முயற்சி செய்து கொண்டுள்ளது. இது சமூகத்தின் பல்வேறு அம்சங்களில் ஒரு விரிவான டிஜிட்டல் மாற்றத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சவூதி அரேபியா செயற்கை நுண்ணறிவுடன் மேம்படுத்தப்பட்ட தரவு மையத்தை உருவாக்குகிறது. குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் வலுவான இடத்தை பிடிக்க சவூதி அரசு செயற்பட்டு வருகிறது. செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு வணிகம் போன்றவற்றையும் இலக்காகக் கொண்டுள்ளது.

சவூதி அரேபியாவின் தொழில்நுட்ப புரட்சி, தேசிய மன்றத் திட்டம், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் கல்வியில் முதலீடு செய்து உலகளாவிய தொழில்நுட்பத்தின் மையமாக தனது நிலையை மாற்றிக் கொள்ள முயற்சி செய்து வருகிறது.

**முஜீபுர் ரஹ்மான் (முதல்வர்),**
**இஸ்லாமிய கற்கைகள் பிரிவு,**
**அல்-ஹுதா கல்லூரி,**
**திஹாரிய.**

## புனித ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவோருக்கு சவூதி அரசின் சேவைகள்



ஆரம்ப காலத்தில் ஹஜ் கடமைகளை நிறைவேற்றும் போது எவ்வித பாதுகாப்புமுறைகளோ நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்குகளோ இருக்க வில்லை.

சவூதி அரேபியாவின் மன்னர் ஆட்சி தொடக்கத்திலிருந்தே அல்லாஹ்வின் விருந்தினர் மற்றும் ஹஜ், உம்ரா செய்பவர்களுக்கு சேவை செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இரண்டு புனித இல்லங்களின் பாதுகாவலர் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஹஜ் கடமைகளை செய்பவர்களுக்கு நெறிப்படுத்தப்பட்ட அனைத்து வசதிகளையும் முறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பையும் வழங்குவதற்கு பங்களிக்கும் பல திட்டங்களையும் முன்முயற்சிகளையும் வழங்கியுள்ளார். அவைகளில்

**01. பாதுகாப்பு வழங்கல்**
சவூதி அரேபியா நிறுவப்பட்டதிலிருந்து மக்கா, மதீனா போன்ற புனித இல்லங்களுக்கு சவூதி அரசாங்கம் முழுமையான பாதுகாப்பை வழங்கியுள்ளது. ஹஜ்காலங்களில் ஹாஜிகளை பாதுகாக்கவும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் சிறப்பு பாதுகாப்புப் படைகள் நிறுத்தப்படல்.

**02. இரு புனித இல்லங்களான மக்கா, மதீனா விரிவாக்கம்**
மன்னர் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் காலத்தில் அதிகரித்து வரும் ஹாஜிகளின் பெரும் எண்ணிக்கையால் இரு புனித இல்லங்களையும் விரிவுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதினால் தொடங்கப்பட்ட இச்சேவை மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் பாரியளவில் விரிவாக்கப்பணிகள் 'புனித இல்லங்களின் விரிவாக்கப்பணிகள்' எனும் திட்டத்தின் கீழ் மிகுந்த ஆர்வத்தடன் நடைபெற்று வருகின்றது.

**03. போக்குவரத்து சேவை**
சவூதி அரசாங்கம் ஹஜ் கடமைகளை நிறைவேற்றும் ஹாஜிகளுக்கு நவீன மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வழிகளை அமைத்துள்ளது. இதில் மிக முக்கியமான ஒன்றுதான் மக்காவையும் மதீனாவையும் இணைக்கும் ஹரமைன் அதிவேக ரயில் பாதையாகும்.

**04. இலவச அதிவிசேட சுகாதார பராமரிப்பு வழங்குதல்**
ஒவ்வொரு வருடமும் சவூதி அரேபியா மக்கா, மதீனா, மினா, அரஃபாத்திலும் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ மையங்கள் மூலம் சிறப்பான சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றது. மிக நெரிசலான இடங்களில் தகுதிவாய்ந்த மருத்துவக்குழுக்கள், சிறப்பு அம்பியூலன்ஸ் குழுக்களையும் கூடுதலாக வழங்குவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**05. ஹஜ், உம்ரா வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகள்**
புனித இல்லங்களை நோக்கி வரும் ஹாஜிகளுக்கு மார்க்க வழிகாட்டல்கள் வழங்கும் ஆயிரக்கணக்கான சிறப்பு வழிகாட்டல் மையங்களை அமைத்துள்ளது. ஹஜ் கடமைகளை எவ்வாறு செய்வது பற்றிய விளக்க வகுப்புகளையும் தகுதிய மதபோதகர்களையும் நியமித்துள்ளனர்.

அதுபோல் பல்வேறு இடங்களில் குளிர்ந்த நீரை வழங்குதல், உணவு விநியோகம், கடுமையான வெப்பம் போன்ற இயற்கை ஆபத்துகளிலிருந்து ஹாஜிகளைப் பாதுகாத்தல், ஹாஜிகள் தங்கள் இருப்பிடங்களை அறிய உதவும் மொபைல்போன் பயன்பாடுகள் மற்றும் உடனடி தகவல்களை வழங்கும் மின்னணு விசாரணை சேவைகள் எனப்பல சேவைகளை செய்து நவீன தொழில்நுட்பம் மூலம் சவூதி அரேபியா செய்வதுடன் மக்கா, மதீனாவில் உள்ள ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகளை ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட்டு ஹாஜிகளுக்கான வசதியை உறுதிசெய்து மிக உயர்ந்த அளவிலான பாதுகாப்பையும் வழங்கிவருகின்றது.

முடிவாக இறைவனின் விருந்தினர்களுக்கு சேவை செய்வது சவூதி அரேபியாவின் குறிக்கோளாக இருப்பதால் அவர்களுக்கு வழங்கும் சேவைகளை முன்னுரிமைப்படுத்தி செய்துவருகின்றனர். அல்லாஹ் அவர்களின் சேவைகளைப் பொருந்திக் கொண்டு நல்லருள் பாலிப்பானாக!

**ஏ.சீ.தஸ்தீக் (பணிப்பாளர்),**
**தாருல் ஹிக்மா கலாபீடம், சவளக்கடை.**

## சவூதி அரேபியாவின் ஸ்தாபக வரலாறு மற்றுமோர் கோணத்தில்..

அரேபிய தீபகற்பத்தில் கி.பி. 430இல் உபைத் இப்னு ஸஃலபாவின் தலைமையில் பனூ ஹனீபா கோத்திரம் யமாமாவின் ஹிஜ்ர் பிரதேசத்தின் ஒரு பல்லத்தாக்கில் (பிற்காலத்தில் அதுவே ஹனீபா பல்லத்தாக்கென பிரபல்யமடைகிறது) குடியேறுகிறது. அதையடுத்து, ஹிஜ்ர் யமாமாவின் முக்கிய நகரமாக எழுச்சியடைந்து காலவோட்டத்தில் பனூ ஹனீபா கோத்திர வழிவந்த ஸுமாமா இப்னு அஸால் அவர்கள் முழு யமாமாவின் தலைவராகிறார். ஹிஜ்ரி 06 முஹர்ரம் 10இல் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரழி) தலைமையில் பனூ பக்ருக்கு எதிராக போரிட முஹம்மத் நபி (ஸல்)அவர்களால் அனுப்பப்பட்ட படையிடம் ஸுமாமா இப்னு அஸால் அவர்கள் (மக்காவுக்குப் பயணித்துக்கொண்டிருக்கும் போது) கைதியாகப் பிடிபட்டு சுய விருப்பத்துடன் முழு மனதாக இஸ்லாத்தை ஏற்கிறார்கள். இந்த வரலாறு முஹம்மத் நபி (ஸல்) வர்களின் வருகைக்கு முன்னரே பனூ ஹனீபா கோத்திரம் அரேபிய தீபகற்பத்தின் முழு யமாமாவின் ஆட்சியாளர்களாக இருந்துள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. ஹுலபாஉர் ராசிதீன்கள், அவர்களை அடுத்து வந்த உமையா மற்றும் அப்பாஸிய்யா கலீபாக்களுக்குப் பின்னர் அரேபியாவின் ஆட்சியில் தளம்பல் நிலையே தொடர்ந்தது. அதனையடுத்து, கி.பி. 1446இல் அதே பனூ ஹனீபா கோத்திரத்தைச் சேர்ந்த மானிஃ இப்னு ரபீஆ அல் முரீதீ அல் ஹனபீ என்பவர் திர்இய்யாவை மையமாகக் கொண்டு தமது முன்னோரின் மரபுரிமை ஆட்சியை ஸ்தாபித்தார். அந்த ஆட்சி சுமார் 280 வருடங்கள் தொடர்ந்த பின் வீழ்ச்சியடைகிறது. எனினும் பனூ ஹனீபா கோத்திர விழுதுகள் விழுந்தாலும் விதையாக முளைத்து வருவார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக கி.பி. 1727 பெப்ரவரி மாதம் இமாம் முஹம்மத் இப்னு ஸஊத் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுகிறார்கள். அதுவே சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினமாக (பெப்ரவரி 22) தற்போதைய மன்னர் ஸல்மான் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மானிஃ இப்னு ரபீஆ அல் முரீதீ அல் ஹனபீ என்பவர்கள் மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களின் 12ஆவது பாட்டனாராகவும் சவூதி அரேபியாவின் தற்போதைய மன்னர் ஸல்மான் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் 13ஆவது பாட்டனாராகவும் இருக்கிறார்.

**இம்தியாஸ் (விரிவுரையாளர்),**
**பின் பாஸ் மகளிர் கல்லூரி, மல்வானை.**





**சா**ந்தி சமாதானம் அனைவராலும் விரும்பப்படுபவை. ஆனாலும் அரசியல், பொருளாதாரம், அதிகார வேட்கைகள் காரணமாக இவ்வுலகம் அமைதியை அடிக்கடி இழப்பதை அவதானிக்கின்றோம். குறிப்பாக 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மூன்றாம் உலக மகா யுத்தம் என்ற கருத்தாடல் அதிகமாக இடம்பெற்றுவருகின்றது. காரணம் பல நாடுகளில் போராட்டங்கள் அதிகரித்ததுதான். குறிப்பாக உக்ரைன் விடயத்தில் இரண்டு வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யா மோதிக்கொண்டது பதற்றத்தையும் உலக மகா யுத்தத்துக்கான சாத்தியக் கூறுகளையும் அதிகரித்தது. மத்திய கிழக்கு நாடுகளும் யுத்த பூமியாக மாறியது. காஸாவின் அவலம் தொடர்கின்றது. சூடான் உள்நாட்டு யுத்தத்தினால் அவதிப்படுகின்றது. எமனில் ஹூதி ஷீஆக்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினை இன்னும் முடிந்தபாடில்லை. ஈராக் நாளாந்தம் கொலைகளை சந்தித்து வருகின்றது. சிரியாவின் தொடர் துன்பம் ஓரளவுக்கு ஓய்ந்தாலும் எப்போது வேண்டுமானாலும் எதுவும் நடக்கலாம் எனும் அச்ச நிலை காணப்படுகின்றது. முஸ்லிம் நாடுகளில் ஆயுத உற்பத்தி நிறைந்த நாடுகளாக காணப்படும் துருக்கி, பாகிஸ்தான் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கிறது. இதற்குள் எப்படியாவது மத்திய கிழக்கின் ராஜா என்ற தனது கனவை நனவாக்கிக் கொள்ள ஈரான் துடிக்கிறது. தனது படைகளையும் தனது செலவில் இயங்கும் ஆயுதக் குழுக்களையும் பயன்படுத்தி சவூதியின் தரைமார்க்கமான அதிகமான வழிகளை முற்றுகையிட்டு காத்துக் கிடக்கிறது. நாங்கள் புதிய மத்திய கிழக்கை உருவாக்கப் போகிறோம் என்று அதற்கான புதிய வரைபடத்துடன் நெதன்யாஹு பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில்தான் சவூதி தன்னையும் பாதுகாத்துக்கொண்டு அடுத்தவர்களுக்கும் தன்னால் முடியுமான உதவிகளைச் செய்ய, நிலைமையை சரியாக ஆய்வு செய்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறது. உண்மையில் மிகக் கச்சிதமாக, நிதானமாக தன்னுடைய நகர்வுகளை மேற்கொண்டது. சவூதி ஆரம்பம் முதல் முறை தவறிய செயற்பாடுகளுக்கும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கும் ஒருபோதும் துணை நின்றதில்லை. அல்-ஜெஸீரா தொலைக்காட்சியில் மிகப் பிரபல்யமான நிகழ்ச்சிகளை நடத்தும் கலாநிதி பைஸல் அவர்கள் சவூதி அரேபியாவின் தீர்க்கமான முடிவுகளையும் நகர்வுகளையும் பார்த்து வியந்து சொல்கிறார்: உண்மையில் நாங்கள் சவூதி அரேபியாவை குறை கண்டுவிட்டோம். வீணாக அதை விமர்சித்துவிட்டோம். நான் கூட அநியாயமாக விமர்சித்துவிட்டேன். ஆரம்ப காலத்திலிருந்து அவர்கள் சொல்லி வந்ததும் செய்ததுமே சரி. இப்போது நாங்கள் அவற்றை களத்தில் உணர்கின்றோம். நாம் சவூதி தொடர்பில் சொன்னவைகள் தவறானவை என மக்கள் உணர்ந்துள்ளனர். அதனால் பிராந்தியத்தில் சவூதிக்கான வரவேற்பும் மக்கள் ஆதரவும் நாளுக்கு நாள் பெருகிவருகின்றது.

உள்நாட்டில் தனது நிலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது சவூதிக்கு பெரும் சவாலாக இருக்கவில்லை. அதனால் தன்னை சூழவும் ஏனைய நாடுகளிலும் உள்ள போர்ச் சூழலைத் தணிக்கவும் பொருளாதார நெருக்கடிகளைக் குறைக்கவும் அர்ப்பணிப்புடன் மிகக் கச்சிதமான செயலாற்றியது சவூதி அரேபியா.

சூடானில் மோதிக்கொள்ளும் அரசாங்கத்தையும் கிளர்ச்சிப்படையையும் பல தடவைகள் மக்காவுக்கு அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தியது. அவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டாலும் மீண்டும் கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்று போராட்டம் நடந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மனித நேய உதவிகளை தாராளமாக வழங்கியது, வழங்கி வருகின்றது. ஈராக் அரசாங்கத்தை பலப்படுத்தி மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சை கொடுக்க முடியுமான உதவிகளையும் ஒப்பந்தங்களையும் செய்தது. அங்கு களத்தில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் என்று அறியப்பட்டவர்களில் முடியுமானவர்களை தனது நாட்டுக்கு அழைத்தும் நேரடியாக சென்றும் பேச்சுவார்த்தைகளை நடத்தி உள்நாட்டு யுத்தம் உக்கிரமடையாதிருக்க உதவியது.

எமனில் ஜனநாயக அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை பாதுகாக்கவும் மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தது. அதன் அனைத்து துறைகளையும் முன்னேற்ற முழு மூச்சாக செயற்பட்டு வருகின்றது. சிரியாவில் ஓர் அரசாங்கம் அமைந்தவுடன் மக்களைப் பாதுகாக்க போராட்டத்தைத் தணிக்க அந்த அரசாங்கத்தைப் பலப்படுத்துவதே ஒரே வழி என முடிவு செய்து அதற்கான நகர்வுகளை மேற்கொண்டது. பஷார் அல் அஸாதினால் அனைத்தையும் இழந்திருந்த அந்த மக்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுக்க தனது அரச கருவூலங்களைத் திறந்தது. சவூதி தனது செல்வங்கள் அனைத்தையும் சிரியாவில் கொட்டுகிறது என்று அடுத்தவர்கள் விமர்சிக்கும் அளவுக்கு மக்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கி வருகின்றது.

பஹ்ரைன், குவைத், ஜோர்தான் ஆகிய நாடுகளில் ஏற்படவிருந்த கிளர்ச்சிகளை மிகவும் புத்திசாதுர்யமாக இராஜதந்திர அடிப்படையில் தடுத்தது. துருக்கி மற்றும் பாகிஸ்தானை ரில்லியன் கணக்கான தனது நிதியைக் கொடுத்து பொருளாதார வீழ்ச்சியிலிருந்து பாதுகாத்தது. அதனால் அவர்கள் நிம்மதிக் காற்றை சுவாசித்தார்கள். எகிப்து சுவிஸ் கால்வாயின் வருமான இழப்பு போன்றவற்றால் மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. தொடரான உள்நாட்டுப் போர் அங்கு ஏற்படுமோ என்ற அச்சமும் நிலவியது. அவற்றை நிவர்த்தி செய்து இயல்பு நிலைக்கு கொண்டுவர தன்னால் முடியுமான அத்தனை உதவிகளையும் எகிப்துக்கு வழங்கியது சவூதி அரேபியா.

சீனா, இந்தியா போன்ற உலகின் எந்த நாடுகளில் முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை இனங்கள் ஒடுக்கப்பட்டாலும் சர்வதேச அமைப்புகள், பிராந்திய அமைப்புகளின் ஊடாக அவற்றை தடுத்து நிறுத்த உழைத்தது. குறித்த நாடுகளுடன் பொருளாதார ரீதியான ஒப்பந்தங்களைச் செய்தல், உதவிகளை வழங்குதல் என்பவற்றினூடாக நிலைமையை தணிக்க முயற்சித்தது. 21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் இன அழிப்பாகக் கருதப்படும் காஸா - இஸ்ரேல் இடையிலான பிரச்சினை சவூதியின் நகர்வுகளுக்கு மிகப்பெரும் சவாலாக அமைந்ததுடன் சவூதியின் ராஜதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கிய ஒன்றாகவும் மாறியது. இந்த யுத்தம் உலக வல்லரசுகளின் நேரடியான பலப்பரீட்சைக்கான ஓர் தளமாக மத்திய கிழக்கு மாறப்போகிறது என்ற விம்பத்தை உருவாக்கியது. மூன்றாம் உலக மகா யுத்தத்தின் தொடக்கப் புள்ளியாக மத்திய கிழக்கு அமையும் என்ற செய்திகளும் நாடுகளின் பலம் பலவீனம் என்பனவும் இந்த யுத்தம் யாரை அடுத்த வல்லரசாக ஆக்கப்போகிறது என்ற கதையாடல்களும் பத்திரிகையாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஆனாலும், தன்னுடைய மற்றும் இஸ்லாமிய நாடுகளின் பலம் பலவீனம் என்பவற்றை சரியாக எடைபோட்ட சவூதி அரேபியா அப்படி ஒரு போராட்டம் நடைபெற்றால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதை கட்சிதமாகக் கணித்து முடியுமானவரை சாத்வீக அடிப்படையில் இராஜதந்திர உறவுகளைப் பயன்படுத்தி போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர முயற்சித்தது. இஸ்லாமிய நாடுகள் அனைத்தையும் பல தடவைகள் தனது முழுச் செலவில் தனது நாட்டில் ஒன்று சேர்த்து காஸா பிரச்சினையை தீர்ப்பதற்கான அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஓர் முடிவு தொடர்பில் ஆலோசித்தது. அனைத்து நாடுகளிடமும் கருத்தொற்றுமையை ஏற்படுத்தியதோடு இதற்கான ஆதரவை சர்வதேச அளவில் பெற்றுக்கொள்வதற்காக அனைத்து நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்தது. சவூதியின் வெளியுறவு அமைச்சர் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர்கள் இரவு பகலாக ஒவ்வொரு நாடாக சென்றனர். உயர்மட்டத்தில் பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பான உண்மைகளை தெளிவுபடுத்தியதோடு பலஸ்தீன மக்களின் நியாயமான கோரிக்கைகளை உலகின் உயர் வர்க்கம் விளங்கி அங்கீகரிக்கும் நிலையை உருவாக்கினார்கள். அவர்களுடன் பல வர்த்தக ரீதியான ஒப்பந்தங்களையும் செய்து உறவுகளைப் பலப்படுத்தினர். இஸ்ரேல் தனிமைப்படுத்தப்பட்டதோடு அனைவரும் இஸ்ரேலின் அட்டூழியங்களை பகிரங்கமாக எதிர்க்கும் நிலை உருவானது. இஸ்ரேலுக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான பிரேரணை உலக வல்லரசுகளின் தலையீடின்றி ஐ.நா. சபையில் நிறைவேறியது. தற்போது ஓரளவு நிலைமை தணிந்துள்ளது.

இதற்கிடையில் பாதிக்கப்படும் மக்களுக்கான உதவிகளை உலக நிவாரண மையங்களுடன் இணைந்தும் தனியாகவும் பல வழிகளிலும் முன்னெடுத்தது. மன்னர் ஸல்மான் நிவாரண மையத்தினால் அதற்கான தனியான செயலி உருவாக்கப்பட்டு மக்களின் முழு ஒத்துழைப்புடன் தேவையான அனைத்து வழிகளிலும் அவர்களுக்கான நிவாரணப் பணி காஸாவிலும் காஸாவுக்கு வெளியிலும் முன்னெடுக்கப்பட்டது. கடல், தரை, வான் மார்க்கம் என அனைத்து வழிகளிலும் தேவையான அத்தனையும் அனுப்பி வைக்கப்பட்டது. உலகின் எந்த நாடுகளும் செய்யாத அளவு மனித நேய உதவிகளைச் செய்தது சவூதி அரேபியா.

உலகின் இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் நேரடி பலப்பரீட்சைக்கான இடமாக உக்ரைன் யுத்தம் கருதப்படுகின்றது. இதனால் ஐரோப்பிய நாடுகள் முழுக்க யுத்த அபாயம் சூழ்ந்து கொண்டது. ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யா சார்பு அணியும் மோதிக்கொள்ளும் ஓர் இடமாக உக்ரைன் மாற்றம் பெற்று வந்தது. இந்நிலையில் ரஷ்யா, உக்ரைன், அமெரிக்கா என தனித்தனியாகவும் கூட்டாகவும் பல சந்திப்புகளை நடத்தி போராட்டத்தை தணித்து சில விட்டுக் கொடுப்புகளுடன் சமாதானத்துக்கு கொண்டுவர உழைக்கின்றது சவூதி. இதன் இறுதிக் கட்டமாக அமெரிக்க, ரஷ்ய, உக்ரைன் வெளியுறவு அமைச்சர்கள் அண்மையில் சவூதியின் தலைநகர் ரியாத்தில் சந்தித்து சவூதியின் மத்தியஸ்தத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். அடுத்த கட்டமாக சவூதியின் மத்தியஸ்தத்தில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஆவலாயிருப்பதாக அமெரிக்க மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகள் அறிவித்துள்ளனர். இதனால் மிகவும் கிட்டிய எதிர்காலத்தில் உலகின் இரு துருவங்கள் என வர்ணிக்கப்படும் இரு பெரும் வல்லரசுகளும் இணையும் புள்ளியாக சவூதியின் ரியாத் அமையவுள்ளது.

இவ்வாறு ஆயுதமுனையில் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்காது பேச்சுவார்த்தை புரிந்துணர்வு அடிப்படையில் தீர்த்துக் கொள்ள வழிகாட்டும் சவூதி சக வாழ்வு சகிப்புத் தன்மை என்பவற்றை உலக மக்களிடையே விதைத்து வருவதால் புத்திசாதுர்யமான அதன் நகர்வுகள் தற்போது பலராலும் மெச்சப்படும் நிலை உருவாகியுள்ளது. இதேவேளை, மத்திய கிழக்கின் விவகாரங்களில் தனக்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளத் துடிக்கும் ஈரானுடனும் சுமுகமான அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள சவூதி ஆர்வம் காட்டி வருவதும் லெபனானில் நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்த அதிபர் பதவிக்கு பொருத்தமான ஒருவரை அனைவரின் ஒத்துழைப்போடு தெரிவு செய்வதற்கு முழு முயற்சியையும் செய்து சவூதி வெற்றி கண்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


இவ்வாறு பல் முனைகளில் உலக சமாதானத்தின் தூதுவராக உருவெடுத்துள்ள சவூதியின் முயற்சிகள் வெற்றியடையவும் அதற்கான உதவிகள் பெருகவும் நாமும் வாழ்த்துகளை தெரிவிப்பதுடன் அனைத்து மக்களும் புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்போடும் நிம்மதியாக வாழும் நிலை உருவாகப் பிரார்த்திப்போம்.

**கலாநிதி எம்.பி.எம்.இஸ்மாயில்**
**(அதிபர்),**
**தாறுஸ்ஸலாம் அரபுக் கல்லூரி.**






## இலங்கை - சவூதி அரேபிய உறவுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம்



**இ**லங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையிலான உறவுகள் - வரலாறு, கலாசார மற்றும் பொருளாதார அடிப்படைகளில் கட்டியமைக்கப்பட்டுள்ளன. இந்த உறவு, 07ஆம் நூற்றாண்டிலிருந்து முதன்முதலில் உருவானதாகும். கடல் வர்த்தக பாதைகள் மூலம் பாரம்பரியமான உறவுகள் ஏற்பட்டு வந்தன.

**வரலாற்றுப் பின்னணி:** இலங்கையின் மன்னர்களுள் ஒருவரான மூன்றாம் அக்கிரபோதி மன்னர், நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த ஒரு தூதரை அனுப்பிய வரலாறு குறிப்பிடத்தக்கது. அதிகாரபூர்வ தூதரக உறவுகள் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டன. முதல் சவூதி தூதுவர் 1977ஆம் ஆண்டு இலங்கைக்கு நியமிக்கப்பட்டார். அதேபோன்று, 1983ஆம் ஆண்டில் இலங்கையின் தூதரகம் ஜித்தாவில் திறக்கப்பட்டது.

**பொருளாதார ஒத்துழைப்பு:** சவூதி அரேபியா இலங்கையின் முக்கிய பணியாளர் சந்தையாக உள்ளது. சுமார் 180,000 இலங்கை ஊழியர்கள் சவூதியில், பல்வேறுபட்ட துறைகள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களின் பணப்பரிமாற்றங்கள் இலங்கை பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய ஆதரவாக உள்ளன. மேலும், சவூதி அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 1.6 பில்லியன் ரியால் மதிப்பில் சுகாதாரம், கல்வி மற்றும் உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் பல திட்டங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

**சமீபத்திய முன்னேற்றங்கள்:** 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம், சவூதி வெளிநாட்டு அமைச்சர் பைசல் பின் பர்ஹான் இலங்கைக்கு வருகை தந்தார். இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் வர்த்தகம், முதலீடு மற்றும் அரசியல் ஆலோசனைகள் தொடர்பாக:
01. இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம்
02. அரசியல் ஆலோசனை ஒப்பந்தம்
03. திறன் சரிபார்ப்பு திட்டம்
என மூன்று முக்கிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டன.

**கலாசார மற்றும் கல்வி பரிமாற்றங்கள்:** 2024ஆம் ஆண்டு இரு நாடுகளின் உறவுகளின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ரியாத் நகரிலும் மற்றும் இலங்கையில் மரநடுகை நிகழ்வுகள் நடத்தப்பட்டன. மேலும், சவூதியில் உள்ள இலங்கையர்களுக்கு இடையில் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டன.

**எதிர்காலத் திட்டங்கள்:** இரு நாடுகளும் வணிகம், வேளாண்மை மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை விரிவுபடுத்துவதற்கான வழிகளை ஆராய்ந்து வருகின்றன. அதைத்தொடர்ந்து ஒரு முழுமையான பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் உருவாக்கப்படவுள்ளது என நம்பப்படுகின்றது.

இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையிலான உறவுகள் வரலாறு என்பதைத் தாண்டி பல துறைகளில் விரிவடைந்து வருகிறது. எதிர்காலத்தில் இந்த உறவுகள் மென்மேலும் பலம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**-கலாநிதி எம்.எச்.எம்.அஸார்-**

# மோட்டார் சைக்கிள் - முச்சக்கரவண்டி மோதி விபத்து

## ஒருவர் காயம்



(டி.சந்ரு செ.திவாகரன்)

நுவரெலியா - தலவாக்கலை ஏ7 பிரதான வீதியில் நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்களாவத்த பகுதியில் நேற்று (20) காலை 8 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவிலிருந்து நானுஓயா ரயில் நிலையத்துக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்சென்ற முச்சக்கர வண்டி மீது நானுஓயா பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதனையடுத்து கட்டுப்பாட்டை இழந்த குறித்த முச்சக்கரவண்டி வீதியோரத்தில் நின்ற லொறியொன்றுடனும் மோதியுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் மலையக மக்களின் தேவைகளை அரசு பூரணப்படுத்தும்

## பாராளுமன்ற உறுப்பினர் அம்பிகா சாமுவேல் நம்பிக்கை



"மலையக மக்களின் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக வரவு -செலவுத் திட்டத்தில் 4,267 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் அந்த மக்களின் வீட்டுத்திட்டத்தை தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்து பூரணப்படுத்தும். அதேபோன்று, பெருந்தோட்ட மக்களின் சம்பளப் பிரச்சினைக்கும் எமது அரசாங்கம் கம்பனிகளுடன் கலந்துரையாடி 1,700 ரூபாவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும்" - என பாராளுமன்ற உறுப்பினர் அம்பிகா சாமுவேல் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

"அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்த வரவு - செலவுத்திட்டமாகவே இந்தத் தடவை வரவு - செலவு திட்டத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக, இது வடக்கு, கிழக்கு, மேற்கு, மலையகம் என அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கியதான வரவு - செலவுத்திட்டமாகும்.

அதேநேரம், நாட்டின் எதிர்கால சந்ததியினரை வலுப்படுத்தும் வகையில் இளைஞர், யுவதிகளைப் பலப்படுத்தும் பல வேலைத்திட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்கால சந்ததியினர் போஷாக்குடைய சந்ததியினராக வருவதற்கு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்குணவு, பாலூட்டும் தாய்மாருக்கான திரிபோஷா திட்டத்தை மேம்படுத்துவதற்காக பாரியளவில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் எதிர்காலம் மற்றும் பாதுகாப்புக்காக பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக பாரியளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நன்நடத்தை நிலையங்களிலுள்ள சிறுவர்களின் போக்குவரத்துக்கு தனியான வாகனத்தை ஒதுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சிறுவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மலையக வைத்தியசாலைகளை தேசிய நீரோட்டத்துடன் இணைப்பதாக நாங்கள் எமது கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்திருந்தோம். அதன் பிரகாரம் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மலையகத்தில் காணப்படும் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு உட்பட அங்கு காணப்படும் மனிதவள மற்றும் பௌதீகவள குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. மலையக மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

குறிப்பாக, மலையக மக்களின் மேம்பாட்டுக்காக இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 83 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் மலையக மக்களின் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 4,267 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களிலும் மலையக மக்களின் வீட்டுத்திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டாலும் அது முழுமைபெறவில்லை. அதனால் இந்த மக்களின் வீட்டுத்திட்ட வேலைத்திட்டத்தை தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்து பூரணப்படுத்துமென்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன். மலையகத் தமிழ் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மலையக இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு கொழும்புக்கு வந்து வீடுகளிலும் கடைகளிலும் தொழில் செய்யும் கலாசாரத்தை மாற்றியமைத்து அவர்களுக்கு முறையான தொழிற்பயிற்சி வழங்கி அவர்களையும் தொழில் உற்பத்தியாளர்களாக்க வேலைத்திட்டம் அமைத்துள்ளோம்.

மலையகப் பிள்ளைகளின் கல்வித் திட்ட அபிவிருத்திக்காக ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்காகப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, பெருந்தோட்ட மக்களின் சம்பளப் பிரச்சினைக்கும் எமது அரசாங்கம் கம்பனிகளுடன் கலந்துரையாடி 1,700 ரூபாவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும்" - என்றார்.

# வாகன விபத்தில் இரு மாணவர்கள் படுகாயம்

(எம்.ஏ.எம்.ஹசனார்.)

வெல்லவாய - தனமல்வில பிரதான வீதி வத்த எனும் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு மாணவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்கள் பாடசாலை வீதியைக் கடக்க முற்பட்டபோது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவர்களை எதிர்த்திசையில் பயணித்த லொறி ஒன்று முட்டி மோதியதில் படுகாயமடைந்த இரு மாணவர்களும் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கென மொனராகல மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லொறிச் சாரதியைக் கைதுசெய்த பொலிஸார் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாகத் தெரிவித்த அதேவேளை, விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 2,000 ரூபா குறையாத சம்பளத்தை அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும்

## இ.தொ.கா. பிரதித் தலைவர் கனகராஜ் வலியுறுத்து



"தோட்டத் தொழிலாளர்களின் வேலைச் சுமையை அதிகரிக்காமல் மேலதிகமாக 350 ரூபாவுக்கு எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவித்தால் அதை நாம் வரவேற்போம்" - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த சம்பள உயர்வுப் பேச்சுவார்த்தையின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்மொழிவு 1,700 ரூபா அடிப்படைச் சம்பளம் என்பதே.

எனினும், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் அடிப்படையில் 2,000 ரூபாவுக்கு குறையாத சம்பளத்தை அரசு பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன் 2,000 ரூபாவுக்கு குறைந்த சம்பளத்தை ஏற்றுக் கொள்ளப்போவதில்லையென்று தெரிவித்திருந்தது. அத்துடன், சம்பள நிர்ணய சபையில் எமது 1,700 ரூபா கோரிக்கையை நிராகரித்தவர்கள் இன்று நாம் கோரிய 1,700 ரூபாவுக்கே வந்து நிற்கின்றனர்.

எனினும், தற்போதைய நிலையில் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தால் அது அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடக்கூடும். எனவே, அரசாங்கம் முன் வைத்திருக்கின்ற தொகையை வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் எவ்வித நிபந்தனைகளும் விதிக்காமல் உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் தொழிற்சங்கங்கள் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தால் அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பெருந்தோட்டக் கம்பனிகள் இழுத்தடிப்புகளைச் செய்து வந்திருக்கின்றன. இது எமது கடந்தகால அனுபவங்களாகும்.

அரசாங்கம் எமது ஒத்துழைப்பை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு சம்பள அதிகரிப்பு என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது. தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பளு, வேலை நேரம் அதிகரிக்கப்படக்கூடாது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யக்கூடிய வகையிலான சம்பள அதிகரிப்பையே நாம் கோரி நிற்கிறோம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தைக் கொடுப்பதற்கு தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாக அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார். எனினும், அது எப்போது நடைமுறைக்கு வருமென்பது தெரிவிக்கப்படவில்லை. இது சம்பந்தமான தெளிவை தொழிற்சங்கங்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் தெரிவிக்க வேண்டுமெனவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# கண்டியில் அறிவிப்பாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு





(உக்குவளை நிருபர்)

இலங்கை வானொலியின் கந்துரட்ட(கண்டி) ஒலிபரப்பின் மும்மொழி சேவைகளின் ஏற்பாட்டில் முதன்முதலாக இளைஞர், யுவதிகள் அறிவிப்பாளர்களாகக் கலந்துகொள்ளும் தமிழ் மொழியிலான அறிவிப்புத்துறை பயிற்சிச் செயலமர்வுகள் சமீபத்தில் கந்துரட்ட நிலைய அரங்கில் நடைபெற்றன.

இந்நிலையப் பிரதிப் பணிப்பாளர் நஜித் ஜயசூரிய வின் தலைமையிலும் ஆலோசனையிலும் நடத்தப்பட்ட இச்செயலமர்வின்போது இலங்கை வானொலி நிலையத் தலைவர் பேராசிரியர் உஜித கயாசான், பணிப்பாளர் தம்மிக்க குமார ,கந்துரட்ட முஸ்லிம் சேவைப் பொறுப்பாளர் எம்.ரமீஸ், கந்துரட்ட நிலைய தொழில்நுட்ப அதிகாரி தம்மிக்க தனசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு இடம்பெற்ற மூன்று செயலமர்வுகளும் முறையே கொழும்பு முஸ்லிம் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இஸ்பஹான் சாப்தீன், கந்துரட்ட முஸ்லிம் சேவை அறிவிப்பாளர் எம். முனாஸ் , அறிவிப்பாளர் திருமதி சாஹிரா ஆகியோரால் சிறப்புற நடத்தப்பட்டதுடன் இச்செயலமர்வில் பல இடங்களிலிருந்தும் வந்து இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் கடல் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த

# 4 இந்திய மீனவர்களுக்கு மார்ச் 07 வரை விளக்கமறியல்



(ஜோசப் நயன்)

மன்னார் கடல் பரப்புக்குள் நேற்று (20)அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகிய 4 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் மார்ச் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று (20) உத்தரவிட்டார்.

குறித்த மீனவர்கள் தமிழ்நாடு மாநிலம் ராமேஸ்வரம் காந்திநகர் பகுதியைச் சேர்ந்தவர்களெனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

மன்னார் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் வடமத்திய மாகாண கடற்படையினரின் கூட்டு நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

# யாழில் FAIRMED நிறுவனத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல்



(பு.கஜிந்தன்)

FAIRMED நிறுவனத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் (19) காலை 09.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

சமூகத்தில் பொருளாதார மட்டத்தில் நலிவடைந்த குடும்பங்கள் மற்றும் அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் பல நிகழ்ச்சித் திட்டங்களை FAIRMED நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. அத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது.

மேலும், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்திவரும் சக்கர நாற்காலி, மூன்று சில்லு துவிச்சக்கரவண்டி என்பன திருத்தவேண்டி ஏற்படும்போது அவற்றை FAIRMED நிறுவனத்தின் அனுசரணையில் இலவசமாகத் திருத்தி வழங்குவது தொடர்பான பொறிமுறையும் ஆராயப்பட்டதுடன், அதன் விபரங்களை மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதேச செயலகங்களூடாக விரைவில் அறிவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தாசினி, FAIRMED நிறுவன இலங்கைக்கான இணைப்பாளர் வைத்திய கலாநிதி நயனி சூரியாரச்சி, சமூகசேவை திணைக்கள மாவட்ட இணைப்பாளர் ந. ரதீஸ்குமார், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கி. தயாபரி, FAIRMED நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# முகமாலையில் கடையொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ். நிருபர்)

முகமாலை, வடக்கு ஏ-9 வீதியிலுள்ள கடையொன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் (19) நள்ளிரவு 12.30 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த கடையின் மீது 2020ஆம் ஆண்டில் கழிவெண்ணெய் வீசப்பட்டதுடன், 2021ஆம் ஆண்டில் முகமூடி அணிந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு நபர்களால் இரும்புக்கம்பிகொண்டு கடையின் சொத்துகள் அடித்து உடைக்கப்பட்டதுடன் சந்தேக நபர்களும் தப்பிச் சென்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மூன்றாவது தடவையாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'பாடசாலைக்கு மத்தியஸ்தம்' செயற்றிட்டம் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் முன்னெடுப்பு

(வவுனியா நிருபர்)

'பாடசாலைக்கு மத்தியஸ்தம்' என்ற தொனிப்பொருளில் மத்தியஸ்தர் சபை தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் (19) முன்னெடுக்கப்பட்டது.

நீதி அமைச்சின் வழிகாட்டலில் சீடா நிறுவனத்தின் நிதியுதவியில் வவுனியா மாவட்ட செயலகத்தின் மத்தியஸ்தர் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.காண்டீபனின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் அருட் சகோதரி எஸ்.ஜே.சியாமினி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நீதி அமைச்சின் கீழுள்ள மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு நாடுபூராகவும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 'பாடசாலைக்கு மத்தியஸ்தம்' என்ற தொனிப்பொருளில் மத்தியஸ்தர் சபை தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை ஆசிரியர்கள் மற்றும் உயர்தர மாணவர்களுக்கு முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வும் அது தொடர்பான செயற்பாடுகள் தொடர்பிலும் பயிற்சி அரங்கு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா - மன்னார் மாவட்ட மத்தியஸ்தர் சபை பயிற்சியாளரும் இணைப்பதிகாரியுமான எஸ்.விமலராஜா, யாழ்ப்பாண மாவட்டத்தின் மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான முகுந்தன், தர்சிகா, வவுனியா பிரதேச செயலக மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெசிந்தா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினர்.

இப்பயிற்சியானது தொடர்ந்து மூன்று தினங்களுக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாக்குதலுக்கிலக்காகிய ஓய்வுநிலை அதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் கடந்த 15 ஆம் திகதி அடாவடிக் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஓய்வுநிலை அதிபரொருவர் நேற்று (20) வியாழக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த 63 வயதான மேற்படி ஓய்வுநிலை அதிபர் தனங்கிளப்பூடாக பூநகரிப் பகுதிக்குச் சென்ற வேளையில் நான்கு பேர் கொண்ட இளைஞர் குழு காரணமின்றி அவர் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய கொடிகாமம் மற்றும் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவ அறிக்கை முடிவுகளின் அடிப்படையில் கைதான நபர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


# திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரியை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல்

(ஜோசப் நயன்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் (19) காலை திருக்கேதீஸ்வர ஆலய சம்பந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் ராமகிருஷ்ணன் கலந்துகொண்டார்.





மேலும் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச - தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ள மகா சிவராத்திரி விழாவுக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கடந்த வருடங்களைப்போன்று இம்முறையும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளவுள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக, போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# ஸாலிஹ் அல்குர்ஆன் மத்ரஸாவின் 33ஆவது ஆண்டு கௌரவிப்பு விழா






காத்தான்குடி ஸாலிஹ் அல்குர்ஆன் மத்ரஸாவில் அல்குர்ஆன் கற்ற 65 மாணவர்களை கௌரவிக்கும் 33ஆவது ஆண்டு கௌரவிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (16) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது. மத்ரஸாவின் அதிபர் மௌலவி எம்.எஸ்.எம்.அஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 65 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் உயர்நிலை அடைந்த மத்ரஸாவின் பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தில் பலதுறைகளிலும் சேவையாற்றிவரும் முக்கியஸ்தர்கள் ஆகியோர் அதி உயர் கௌரவ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் மௌலவி எம்.ஐ.ஆதம்லெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர் எனப் பலரும் பங்கேற்றனர்.

-எம்.பஹத் ஜுனைட்-
























# ஒன்றரை கோடி ரூபா ஒப்பந்தம்

# இதுவரை 05 கொலைகள்...

## சட்டத்தரணி அட்டையை காண்பித்து தப்பிக்க முயற்சி..

**புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டின் தகவல்கள்**

புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தின் 05ஆம் இலக்க நீதிமன்ற அறையில் நீதவான் விசாரணை நடத்திக் கொண்டிருந்தபோது, குற்றவியல் உலகில் சக்திவாய்ந்த குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவருமான சஞ்சீவ குமார சமரரத்ன (கனேமுல்லே சஞ்சீவ) என்பவரை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றவரை, விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சட்டத்தரணியாக மாறுவேடமிட்டு இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர், 08 மணி நேரத்துக்குள் கைது செய்யப்பட்டார்.

கற்பிட்டியிலிருந்து படகில் ஏறி நாட்டை விட்டு தப்பிச் செல்லத் தயாராகி வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சிறப்பு தேடுதலின்போது, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரைக் கைது செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், 34 வயதான முஹம்மது அஸ்மான் செரிஃப்தீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் முஸ்லிமா அல்லது அந்தப் பெயரை பயன்படுத்தினாரா என்பது பற்றி விசாரிக்கப்படுகிறது. அவர் புத்தளம், பாலாவி பகுதியில் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார். இந்த சந்தேக நபர் ஒரு கூலி கொலையாளி என்றும் இராணுவத்தில் பணியாற்றும் ஒரு வீரர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. புலனாய்வு நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளதாகவும் விசாரணையாளர்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பாக மேலும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒன்றரை கோடி ரூபா மதிப்புள்ள ஒப்பந்தத்துக்காக அவர் நீதிமன்றத்தில் இந்தக் கொலையைச் செய்தது தெரியவந்துள்ளது. ஒப்பந்தத் தொகையிலிருந்து அவர் முற்பணமாக ரூ.02 இலட்சம் பெற்றதாகவும் தெரியவந்துள்ளது.

டுபாயில் வசிக்கும் சக்திவாய்ந்த பாதாள உலகக் குற்றவாளியான கெஹெல்பத்தர பத்மவின் நெருங்கிய கூட்டாளியிடமிருந்து அவர் இந்தக் கொலை ஒப்பந்தத்தைப் பெற்றதாக விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஐஸ் போதைப்பொருளுக்கு அதிக அடிமையான சந்தேக நபர், அதற்கான பணத்தை திரட்டுவதற்காக ஒப்பந்தக் கொலைகளிலும் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜனவரி 07ஆம் திகதி கல்கிஸை, வட்டரப்பல வீதியில் ஒருவரைக் கொன்று மற்றொருவரை காயப்படுத்திய மர்மக் கொலையாளி இவர்தான் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தக் கொலை உட்பட மேலும் 05 கொலைகளில் அவருக்குத் தொடர்பிருப்பதும் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி கீதுவை, லியனகேமுல்லவில் ஒரு வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகளை சுட்டுக்கொன்ற சம்பவத்திலும் இந்த சந்தேக நபர் தொடர்புடையவர் என்று பொலிஸார் நம்புகின்றனர். நேற்றுமுன்தினம் இரவு அது குறித்து அவரிடம் நீண்ட நேரம் விசாரிக்கப்பட்டது.

நீதிமன்ற வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு புத்தளம், பாலாவியில் உள்ள விசேட அதிரடிப் படையினரால் அமைக்கப்பட்ட பொலிஸ் சோதனைச் சாவடியில் வாகனம் சோதனை செய்யப்பட்டபோது, சந்தேக நபர், சட்டத்தரணி என்று கூறி ஒரு சட்டத்தரணியின் அடையாள அட்டையைக் காட்டி சோதனையைத் தவிர்க்க முயன்றார். கொடிகாரகே கசுன் பிரபாத் நிஸ்ஸங்க என்ற நபரின் பெயரில் சட்டத்தரணிகள் சங்கத்தால் வழங்கப்பட்டதை போன்ற போலி அடையாள அட்டையை அவர் வைத்திருந்தார்.

அவரது நடத்தையில் சந்தேகமடைந்த விசேட அதிரடிப்படையினர், தங்கள் மொபைல் போன்களில் வந்த, நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபரின் புகைப்படத்தையும் வாகனத்திலிருந்த சட்டத்தரணி என்று கூறிக்கொண்ட நபரின் படத்தையும் ஆய்வு செய்தனர். அந்தப் படம் வாகனத்திலிருந்த நபரின் படத்துடன் பொருந்தியது கண்டறியப்பட்டது. மேலும் பல சோதனைகளுக்குப் பிறகு, அவர் வாகனத்தின் ஓட்டுநருடன் கைது செய்யப்பட்டார்.

புதுக்கடை நீதிமன்றத்தில் நடந்த கொலையில் ஒரு பெண்ணும் சம்பந்தப்பட்டிருந்தார். ஒரு சட்டத்தரணி போல அந்தப் பெண், வெள்ளை மற்றும் கறுப்பு நிறப் புடவை அணிந்து நீதிமன்ற வளாகத்துக்கு வந்திருந்தார். அந்தப் பெண் துப்பாக்கியை நீதிமன்ற வளாகத்துக்குக் கொண்டு வந்திருந்தார். அவர் நீர்கொழும்பு, கட்டுவெல்லேகம வீதியைச் சேர்ந்த பின்புர தேவகே இஷாரா செவ்வந்தி (வயது 26) எனத் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது. அவரைக் கைது செய்ய பொலிஸார் சிறப்பு நடவடிக்கையையும் மேற்கொண்டனர். சீதுவயில் துப்பாக்கிச் சூடு நடத்த துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுடன் ஒரு பெண்ணும் வந்ததாக தகவல்கள் வந்ததால், அந்தப் பெண் அதே பெண்ணா என்பதில் சந்தேகம் இருப்பதாக ஒரு மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இந்தப் பெண், ஒரு சட்டத்தரணிபோல் காட்டிக்கொண்டு, தண்டனைக் கோவை சட்டப் புத்தகத்துக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியுடன் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். மேலும், துப்பாக்கியை நீதிமன்ற வளாகத்துக்குள் மறைத்து வைக்கும் வகையில் புத்தகத்தின் பக்கங்கள் வெட்டப்பட்டு, உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. புத்தகத்தின் கூடுதலாக, கையில் பல கோப்புகளுடன் அவர் வருவதும் பாதுகாப்பு கெமராக்களில் பதிவாகியுள்ளது. அந்தப் புத்தகத்தை நீதிமன்றத்துக்குள் உள்ள சட்டத்தரணிகளுக்கான அறையில் வைத்துள்ளார். அதை துப்பாக்கிதாரி பின்னர் எடுத்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டின் பின்னர், சட்டத்தரணிகள் காத்திருந்த அறையில் துப்பாக்கி கொண்டுவரப்பட்ட புத்தகத்தை சட்டத்தரணிகள் கண்டுபிடித்தனர். அந்தப் புத்தகத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். நீதிமன்ற வளாகத்தில் உள்ள கழிப்பறைக்கு அருகில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் துப்பாக்கியை வைத்திருந்தது பாதுகாப்பு கெமரா கண்காணிப்பில் தெரியவந்துள்ளது.

கம்பஹா பாதாள உலகத்தின் சக்திவாய்ந்த நபரான கெஹெல்பத்தர பத்மே உட்பட பாதாள உலக குற்றவாளிகள் குழுவினால் தீட்டப்பட்ட திட்டத்தின் விளைவாக இந்த துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும் இதில் கொமாண்டோ சாலிந்த, பட்டுவத்த சாமர, ஜா-எல ஜூட் மற்றும் கெசெல்வத்த தினுக ஆகியோர் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் புலனாய்வு அமைப்புகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பாக தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பான பல முக்கிய தகவல்கள் விசாரணைகளின்போது தெரியவரும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சஞ்சீவவின் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணிகள் அமர்ந்திருந்த பகுதியில் அமர்ந்திருந்த துப்பாக்கிச் சூடு நடத்தியவர், தனது இருக்கையிலிருந்து எழுந்து, கேள்விகள் கேட்கப்போகும் சட்டத்தரணிபோல் நடித்து, உடனடியாக துப்பாக்கிச் சூடு நடத்தியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சஞ்சீவ மீது ஐந்து தோட்டாக்கள் பாய்ந்ததாகவும் தோட்டாக்கள் அவரது மார்புப் பகுதியில் பாய்ந்ததாகவும் கூறப்படுகிறது.

நீதிமன்ற வளாகத்துக்குள் முதலில் வந்தவர் சட்டத்தரணி வேடமணிந்த பெண் என்பது பாதுகாப்பு கெமரா கண்காணிப்பில் தெரியவந்துள்ளது.

விசாரணையில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், சட்டத்தரணி வேடமணிந்து, ஒரு உறையை மட்டும் எடுத்துச் சென்று நீதிமன்ற வளாகத்துக்கு வந்திருப்பதும் தெரியவந்தது. சட்டத்தரணி வேடமணிந்த பெண் பாதுகாப்பாக நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்த பிறகு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவரிடம் துப்பாக்கியைக் கொடுத்த பிறகு, துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பு, சட்டத்தரணி வேடமணிந்த பெண் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர், துப்பாக்கிச் சூடு நடத்தப் பயன்படுத்திய 38 கலிபர் ரிவோல்வரை துப்பாக்கிச்சூடு நடந்த இடத்திலேயே வீசி விட்டு, சாட்சிக்கூண்டுக்கு அருகிலுள்ள ஒரு கதவு வழியாக தப்பிச் சென்றார்.

நீதிமன்றத்தின் படிகளில் இருந்தவர்கள் அனைவரும், 'கனேமுல்ல சஞ்சீவ சுடப்பட்டார்' என்று கூச்சலிட்டனர். ''நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச் சூடு நடக்கிறது'' எனக் கூறியபடி, துப்பாக்கிதாரி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கைதான பின்னர் சந்தேகநபரிடம் விசாரித்தபோது, அவர் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயில் வழியாக வெளியேறியதாகக் கூறினார். இது தொடர்பாக மேலும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த கொலைத் திட்டம் விரிவான ஒத்திகைகளின் விளைவாகும் என்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பல சந்தர்ப்பங்களில் நீதிமன்ற வளாகத்துக்குள் சென்று நிலைமைகளை ஆய்வு செய்ததாகத் தெரிகிறது என்றும் அந்த அதிகாரி கூறினார். அவர் சட்டத்தரணி வேடமிட்டும் நீதிமன்றத்துக்குள் சென்று ஒத்திகை பார்த்துள்ளார்.

இந்தக் கொலைகள் குறித்து விசாரிக்க ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர், சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார். கொழும்பு குற்றப்பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக லொக்குஹெட்டியின் வழிகாட்டுதலின் கீழ் பிரதான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. எதிர்காலத்தில் குற்றப் புலனாய்வுத் துறையிடம் விசாரணையை ஒப்படைப்பது குறித்து பதில் பொலிஸ் மா அதிபர் கவனம் செலுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பெண் சந்தேக நபர் நாட்டை விட்டு தப்பிச் செல்வதைத் தடுக்க தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக உயிருக்கு அச்சுறுத்தல் இருந்த சஞ்சீவ, பொலிஸ் சிறப்புப் படையின் பாதுகாப்பின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக சிறையிலிருந்து அழைத்து வரப்பட்டார். பல சந்தர்ப்பங்களில், அவர் சிறையிலிருந்து ஸ்கைப் மூலம் நீதிமன்றத்தில் ஆஜரானார். சிறப்பு வழக்குகளைத் தவிர, அவரை பூஸாவிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் நேற்று முன்தினம்(19) நீதிமன்ற அறை 05 இல் ஸ்கைப் மூலம் விசாரணை நடத்த திட்டமிடப்பட்டது. இருப்பினும், நீதிமன்ற அறை எண் 09 இல் விசாரிக்கப்படும் வழக்குக்காக அவரை நீதிமன்றத்துக்கு அழைத்து வர வேண்டியிருந்தது. அதன்படி, நேற்றுமுன்தினம், 12 ஆயுதம் ஏந்திய காவலர்களின் பாதுகாப்புடன் அவர் புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். இருப்பினும், நீதிமன்றம் 09 இன் நீதவான் ஆஜராகாததால், அவர் நீதிமன்றம் 05 இன் வழக்குக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் அவருக்கு நீதிமன்றம் எண் 05 இல் 03 வழக்குகள் விசாரிக்கப்படவிருந்தன.

நேற்றுமுன்தினம் காலை 9.45 மணியளவில் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடங்கிய பின்னர், மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திரன, சந்தேக நபரான கனேமுல்ல சஞ்சீவவின் வழக்கை முதலில் விசாரிக்கத் தொடங்கினார்.


அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் விசாரிக்கப்படவிருந்தன. சந்தேக நபர் சஞ்சீவவின் வழக்கு முதலில் விசாரிக்கப்பட்டது. அதே நேரத்தில் சந்தேக நபர் கனேமுல்லே சஞ்சீவ வழக்குக்காக கூண்டிலிருந்து ஆஜரானதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர். சஞ்சீவ மீதான மூன்று வழக்குகளில் முதலாவது வழக்கு விசாரணைக்கு வந்த பிறகு, இரண்டாவது வழக்கு விசாரணைக்கு வரவிருந்தபோது, ஒரு சட்டத்தரணி வேடமணிந்த துப்பாக்கிச் சூடு நடத்தியவர், திடீரென தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து ஒன்றன்பின் ஒன்றாக சுட்டார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த கனேமுல்ல சஞ்சீவ, குற்றவாளிக்கூண்டிலேயே சரிந்து விழுந்தார். பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதற்குள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, நீதிமன்ற வளாகம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், நீதிமன்றத்துக்குள் இருந்த எவரையும் நீதிமன்றத்தை விட்டு வெளியேறவோ அல்லது நீதிமன்றத்துக்கு வெளியே இருந்த எவரையும் நீதிமன்ற வளாகத்துக்குள் நுழையவோ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனுமதிக்கவில்லை. சம்பவம் நடந்த சில நிமிடங்களுக்குப் பிறகு, கைரேகை பிரிவினர் மற்றும் பொலிஸ் நாய்கள் நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு தேவையான சோதனைகளை மேற்கொண்டன. பொலிஸ் நாய்கள் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலிலிருந்து வெளியே வந்து வலதுபுறத்தின் அருகில் அமைந்துள்ள சட்டக் கல்லூரியை நோக்கிச் செல்வதையும் காண முடிந்தது.

துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தொடர்ந்து, நீதிமன்ற வளாகத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்பட்டன. பின்னர் பிற்பகலில், பிரதான மஜிஸ்திரேட் நீதிமன்றம் மீண்டும் திறக்கப்பட்டது.

தாக்குதலின் பின்னர் கொமாண்டோ சலிந்து இந்த கொலைக்கு பொறுப்பேற்றார். அவர் யூரியூப் ஊடாக வெளியிட்ட வீடியோவில், சஞ்சீவவை தாமே கொன்றதாக தெரிவித்தார். இந்தக் கொலைக்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பது குறித்து பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.














# ‘ஸ்மார்ட் யூத்’ கண்காட்சி - இசை நிகழ்ச்சிக்காக செலவிடப்பட்ட 188 மில்லியன் ரூபா காசோலை

## ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக கோப் குழுவில் அம்பலம்




‘ஸ்மார்ட் யூத்’ கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சிக்காக செலவிடப்பட்ட 188 மில்லியன் ரூபாவுக்கான காசோலைக்கான கையொப்பத்தை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் தலைவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்தினமே இட்டுள்ளமை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) தெரியவந்தது.

செலவினங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியிராத சந்தர்ப்பத்திலேயே இந்தக் காசோலையில் முன்னாள் தலைவர் கையொப்பமிட்டிருந்ததாகவும் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து 2024 ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாளே இவ்வாறு கைச்சாத்திட்டிருப்பதாகவும் இங்கு தெரியவந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் திறைசேரியிலிருந்து 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு முன்னாள் தலைவரின் அழுத்தத்துக்கமைய செலவுகளுக்கான ஒப்புதலை வழங்கி கைசோலையைக் கையளிக்க வேண்டி ஏற்பட்டதாகக் குழுவில் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கணக்கதிகாரி என்ற ரீதியில் முன்னாள் தலைவர் வழங்கிய பணிப்புரைக்கமைய அவ்வாறு செயற்பட்டதாகவும் தாம் அவ்வாறு செயற்படாதுவிட்டிருந்தால் இடமாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கவேண்டி ஏற்பட்டிருக்குமென்றும் அதிகாரிகள் இங்கு தெரிவித்தனர். இதற்கமைய ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் 188 மில்லியன் ரூபாவுக்கான காசோலையை வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

இது மிகவும் உணர்திறன் மிக்க விடயமென அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுத் தலைவர் (வைத்தியர்) நிசாந்த சமரவீர தெரிவித்தார். அரசாங்க அதிகாரிகளைப் பலிக்கடாவாக்கி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் தலைவர் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

அத்துடன், இதுபோன்ற சம்பவங்களின்



போது அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான ஆளுமை அதிகாரிகளுக்கு இருக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டிய தலைவர், தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை அதிகாரிகள் சரியான முறையில் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்த விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடல்கள் நடந்துகொண்டிருக்கும்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் நிதிப் பணிப்பாளர் குழுவுக்கு வருகை தந்திருந்தபோதும் குழுக் கூட்டம் முடிவடையும் வரை அவர் எந்தக் கருத்தையும் முன்வைக்காமல் இருப்பதற்கு முயற்சித்தமை தொடர்பிலும் கோப் குழு உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் கருத்துகளை முன்வைக்கும்போது அமைதியாக இருக்க முயற்சிப்பது குழுவைப் பிழையாக வழிநடத்துவதாக அமைவதுடன், இதற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் குழு சுட்டிக்காட்டியது.

அத்துடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் தலைவரைக் கோப் குழு முன்னிலையில் அழைப்பதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டதுடன், இது பற்றி மேலும் கலந்துரையாடுவதற்கு நேற்று (20) கோப் குழுவைக் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை யூத் சேர்விஸ் (தனியார்) நிறுவனத்தின் 2022ஆம் ஆண்டு மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, தற்போதைய செயலாற்றுகை மற்றும் 2021 நவம்பர் 16ஆம் திகதி நடத்தப்பட்ட கோப் குழுவில் வழங்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற் றம் பற்றி ஆராயும் நோக்கில் கோப் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) நிஷாந்த சமரவீர தலைமையில் நேற்று முன்தினம் கூடியபோதே இந்தத் தகவல்கள் யாவும் வெளிப்பட்டன.

2024 ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையான எட்டுமாத காலப்பகுதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட ஸ்மார்ட் யூத் புத்தாண்டுக் கொண்டாட்டம், தேசிய இளைஞர் வெசாக் விழா, தேசிய இளைஞர் பொசன் வலயம், யாழ்ப்பாண இளைஞர் சந்திப்பு நிகழ்ச்சி, 31 Night Youth Celebration மற்றும் ஸ்மார்ட் யூத் கண்காட்சி போன்ற நிகழ்வுகளுக்காக ஒதுக்கப்பட்ட 5,38,080,000 ரூபா தொகை ஒதுக்கீடு மற்றும் அதன் செலவினம் குறித்து கவனஞ்செலுத்தப்பட்டது.

அதன்படி, ஜனாதிபதி செயலகத்தின் இளைஞர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதற்காக ஏறத்தாழ 398 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தாலும், பற்றுச்சீட்டுகளில் குறைபாடுகள் காணப்பட்டமையால் அந்தத் தொகை விடுவிக்கப்படவில்லையென்றும் தெரியவந்தது.

மேலும், வருட ஆரம்பத்தில் விநியோகஸ்தர்கள் பதிவுசெய்யப்பட்டதாகவும் கடந்த காலங்களில் அவ்வாறில்லாமல் இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் தலைவரின் விருப்பத்துக்கமைய அவர் குறிப்பிடும் நபர்களிடமிருந்து ஏலங்கள் பெறப்பட்டு விநியோகங்கள் பெறப்பட்டதாகவும் தெரியவந்தது.


காசோலைகள் வழங்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட நபர் அங்கு இல்லையென்பதும் மற்றவர்களுக்கு அவற்றைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

மேலும், ஸ்ரீலங்கா யூத் சேர்விஸ் (தனியார்) நிறுவனத்தில் நிதி ஒழுக்கத்தைப் பேணத் தவறியது மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடத்தத் தவறியமை குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும் 25 அதிகாரிகளை தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தில் நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிப்பது, முன்னைய கோப் குழுவால் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்துவது குறித்தும் கவனஞ்செலுத்தப்பட்டது.

மேலும், பல சிக்கல் நிறைந்த சூழ்நிலைகள் தெளிவாகத் தெரிவதால், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், ஸ்ரீலங்கா யூத் சேர்விஸ் (தனியார்) நிறுவனத்தில் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை குறித்துக் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குழு பரிந்துரைத்தது.



**கொழும்பு - புதுக்கடை நீதிமன்றத்தில் வைத்து கனேமுல்ல சஞ்சீவவை சுட்டுக்கொலைசெய்த பிரதான சந்தேக நபர், புத்தளம் பகுதியை நோக்கி தப்பிச் செல்வதாகக் கிடைத்த தகவலையடுத்து, புத்தளம் - பாலாவி பகுதியில் நேற்று முன்தினம் (19) பொலிஸாரும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் இணைந்து பாரிய சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.இதன்போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.**

**படங்கள்:** *ரஸீன் ரஸ்மின்*

# கண்டி மாவட்டத்தின் நான்கு பிராந்திய வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறை

## கண்டி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தகவல்

*எம்.ஏ.அமீனுல்லா*

கண்டி மாவட்டத்திலுள்ள 04 பிராந்திய வைத்தியசாலைகளிலும் ஒரு தோட்ட வைத்திய சாலையிலும் தாதியர்கள் இல்லையென கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

பட்டுமுல்ல, அம்பகஹபெலஸ்ஸ, மொரஹேன, பட்டியகம பிராந்திய வைத்தியசாலைகள் மற்றும் வெஸ்ட் ஹோல் தோட்ட வைத்தியசாலையில் நிரந்தர தாதியர் எவரும் இல்லையென கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சேனக தலகல தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் விவசாய, நீர்ப்பாசன, கால்நடை மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் புதிய தாதியர்களை ஆட்சேர்ப்பு செய்யும்போது இந்த வைத்தியசாலைகளுக்கு தாதியர்களை வழங்குமாறு சேனக தலகல இங்கு கோரிக்கை விடுத்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன, மாவட்டத்தின் சில மருத்துவமனைகளில் செவிலியர்கள் இல்லாத நிலையில், மற்றைய மருத்துவமனைகளில் எப்படி செவிலியர்கள் அதிகமாக உள்ளனர் என்று கேள்வியெழுப்பினார்.

மாவட்டத்தில் செவிலியர்களை முறையான இடமாற்றம் செய்வதற்கு சில தாதியர் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதன் காரணமாகவே இந்த நிலைமை உருவாகியுள்ளன.

தொழிற்சங்கங்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் தாதிகளை அவர்களின் தேவைக்கேற்ப வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யவேண்டுமென சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

# மனைவியை தாக்கி துன்புறுத்திய கணவன்

## மனநல அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

தனது மனைவியை துன்புறுத்தியமைக்காக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட கணவனை மார்ச் 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மஹர எண் 01 நீதிமன்ற நீதிபதி காஞ்சனா டி சில்வா நேற்று (20) உத்தரவிட்டார்.

அன்றைய தினம் சந்தேக நபரின் மனநல அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டது.

ஹுணுபிட்டிய பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இருவருக்கும் திருமணமாகி சுமார் ஒரு வருடம் ஆகிய நிலையில் மனைவி வேலைக்காக இரண்டு தடவைகள் வெளிநாடு சென்றுள்ளார். ஆனால், சந்தேக நபரான கணவர் தனது மனைவியை வேலைசெய்ய அனுமதிக்காமல் திரும்ப வரவழைத்துள்ளார். அவர் தொடர்ந்து தனது மனைவியைத் தாக்கி துன்புறுத்திவந்துள்ளதாகவும் மனைவியின் வங்கிக் கணக்கிலிருந்து அடிக்கடி பணம் எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கிரிபத்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அரசாங்கத்தின் வருமானத்தைப் பலப்படுத்த உகந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பு

## இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் ஜனாதிபதிக்கு வாழ்த்து

அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு இம்முறை வரவு - செலவுத் திட்டம் வரையறுக்கப்பட்ட நிதிவாய்ப்புகளுக்குள் அரசாங்கத்தின் வருமானத்தைப் பலப்படுத்த உகந்ததாகத் தயாரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை நிர்வாக சேவைச் சங்கத்தின் செயலாளர் காலிந்த ஜயவீர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்மொழிந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு வாழ்த்துத் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்க நிதி நிலைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் அரசாங்கத்துக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கும்.

2025 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்டிருக்கும் அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட நிதி சந்தர்ப்பங்களுக்குள் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை மிக அதிக பெறுமதியால் அதிகரித்து, மிகக் குறைந்த நிதிப் பெறுமானத்தைக் கொண்ட சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டும் உச்ச முயற்சியை மேற்கொள்வது பாராட்டத்தக்கது.

குறிப்பாக, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்தி நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ளக்கூடியவாறு வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தல், மோசடி மற்றும் ஊழலைத் தடுக்க சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டம் மற்றும் விதிமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தல், வரி சேகரிக்கும் நிறுவனங்களின் வினைத்திறனை மேலும் அதிகரிக்க அவர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக மக்களின் நிலைப்பாடு வரவு - செலவுத்திட்டத்தில் வெளிப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களை செயற்றிறனுடனும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்த இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் அர்ப்பணிக்குமென்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 2024இல் நாய்க்கடிக்குள்ளான 1,80,000 பேருக்கு சிகிச்சை

## ரூ.1000 மில். வரை அரசு செலவு

கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை சுமார் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 926 பேர் நாய்க்கடிக்கு சிகிச்சை பெற்றதாக சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாய்க்கடிக்கு சிகிச்சையளிப்பதற்காக அரசாங்கம் ரூ. 850 முதல் ரூ. 1,000 மில்லியன் வரை செலவிட்டுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு கம்பஹா மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான நாய்க்கடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




**மலேசிய கலை இலக்கிய அன்பர்கள், சக்கரம் ஊடக ஸ்தாபகர் ஆகியோர் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர். இவர்கள் யாழ். ஊடகவியலாளர் குழுவையும் மலையக எழுத்தாளர் மாத்தறை வடிவேலன் தலைமையிலான குழுவினர்களையும் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான கலாசார பரிவர்த்தனம் பற்றிக் கலந்துரையாடினர். இதன்போது இலங்கைக்கான யாழ். இந்திய உதவித் தூதுவர் சாய்மகேஸ் இருநாட்டு கலைஞர்களையும் வரவேற்று கௌரவித்தார். இந்நிகழ்வில் இலக்கியவாதிகள் தங்கள் நூல்களை இந்திய உதவித் தூதுவரிடம் கையளித்தனர்.**

# வருடாந்த புனித புர்தா தமாம் மஜ்லிஸ்



*பேருவளை பீ.எம்.முக்தார்*

பேருவளை, சீனன் கோட்டை பாஸியா ஜும்ஆ மஸ்ஜிதில் பிரதி வெள்ளிக்கிழமை காலையில் நடைபெற்றுவரும் புனித புர்தா மஜ்லிஸின் தமாம் நிகழ்வு நாளை மறுதினம் (23) ஞாயிற்றுக்கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து சீனன்கோட்டை பாஸியா ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெறும்.

அஸர் தொழுகையைத் தொடர்ந்து புனித புர்தா மஜ்லிஸும் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபா யாகூத்தியா ஹழரா மஜ்லிஸும் இஷாத் தொழுகையைத் தொடர்ந்து ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி எம்.என்.எம். இக்ராமினால் (அல் பாஸி) முஸாக்கராவும் நடத்தப்படும்.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

இந்நிகழ்வை சீனன்கோட்டை பள்ளிச்சங்க அனுமதியுடன் புர்தா சபை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





**மாளிகாவத்தை சித்தி விநாயகர் ஆலயத்தின் கோபுர வாயில், மூலஸ்தான திருக்கதவு, கொடிமரம் ஸ்தாபன நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பெருந்தொகையான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.**

### சட்டவிரோத குடியேறிகளை நாடுகடத்தும் அமெரிக்கா

# பனாமாவில் ஹோட்டல் அறையில் சிறைபிடிக்கப்பட்ட இலங்கையர்கள் உட்பட வெளிநாட்டினர் 300 பேர்

## ஜன்னல் கதவுகள் வழியாக உதவிகோரிய அவலம்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியா, நேபாளம், இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் பனாமாவிலுள்ள ஹோட்டல் அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் ஜன்னல் கதவுகள் வழியாக, உதவி கேட்டு நின்றிருந்த போட்டோக்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்போரை வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சொந்த நாடுகளுக்கு அனுப்பப்படும் வெளிநாட்டினர், பனாமாவிலுள்ள ஹோட்டல் அறையில் சிறைபிடிக்கப்பட்டபோது, ஜன்னல் வழியாக உதவி கேட்டு நின்ற சம்பவம் அரங்கேறியுள்ளது. இச்சம்பவம் சர்வதேச அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


உரிய ஆவணங்களின்றி, சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை வெளியேற்றும் பணியை ட்ரம்ப் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது. தற்போது வரையில் 03 கட்டங்களாக இந்தியர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்படுபவர்களுக்கு கை மற்றும் கால்களை விலங்குகளால் பூட்டப்பட்டு அழைத்து வரப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியா, நேபாளம், இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் பனாமாவிலுள்ள ஹோட்டல் அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் ஜன்னல் கதவுகள் வழியாக, உதவி கேட்டு நின்றிருந்த போட்டோக்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவதில் நிலவும் சிக்கல்களால், பனாமாவிலிருந்து, அவரவர் சொந்த நாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைகளை அமெரிக்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசர் பிரான்சிஸுக்கு தீவிர நிமோனியா தொற்று!



பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 88) தீவிர நிமோனியா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது உடல்நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, பாப்பரசர் பிரான்சிஸ் ''தான் இம்முறை உயிர் பிழைப்பது கடினம்'' என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. பாப்பரசர் பிரான்சிஸ் மூச்சுக் குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்தாலி தலைநகர் ரோமிலுள்ள ஜெமெலி வைத்தியசாலையில் கடந்த 14ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

முதலில் மருத்துவமனைக்குச் செல்ல தயக்கம் காட்டிய அவர் மருத்துவர்களின் கட்டாயத்தின்பேரில் அதன்பின் மருத்துவனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அவருக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில், நுரையீரல் இரண்டிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, அவருக்கு ஆன்டிபயோடிக் மருந்துகள் அளிக்கப்பட்டு தீவிர மருத்துவ கண்காணிப்பில் இருந்து வருகிறார்.

அன்னாரது நுரையீரலின் ஒரு பகுதி பல ஆண்டுகளுக்கு முன் அகற்றப்பட்டுவிட்ட நிலையில், தற்போது நோயின் தீவிரம் அதிகரித்து காணப்படுகிறது.

எனினும், பாப்பரசர் நேற்றுமுன்தினம் நன்றாக தூங்கி எழுந்திருப்பதுடன் காலை வழக்கம்போல சிற்றுண்டி எடுத்துக்கொண்டதாகவும் வத்திக்கான் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிரிழந்த இஸ்ரேலிய பணயக் கைதிகள் நால்வரின் உடல்களை கையளித்த ஹமாஸ்

## ''இது மிகவும் கடினமான நாள்'' - நெதன்யாஹு வேதனை



''பணயக் கைதிகளின் உடல்களை பெறும் இந்நாள் இஸ்ரேல் அரசுக்கு மிகவும் கடினமான நாள்'' என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

காஸாவில் 15 மாதங்களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஜனவரி மாதம் போர்நிறுத்தம் தொடங்கியது. மூன்று கட்டமாக அமுல்படுத்தப்படும் போர்நிறுத்தத் திட்டம் தற்போது முதல் கட்டத்திலுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் மற்றும் பலஸ்தீன கைதிகள் பரஸ்பரம் விடுதலை செய்யப்பட்டு ஒப்படைக்கப்படுகின்றனர்.

போர் நிறுத்தத்தின் முதற்கட்டமாக 06 வாரங்களில் (42 நாட்கள்) 33 பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. 33 பணய கைதிகளுக்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளிலுள்ள பலஸ்தீனர்கள் 1,904 பேரை இஸ்ரேல் விடுதலை செய்கிறது. பணய கைதிகள் 33 பேரில் சிலர் உயிரிழந்துள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

06 வார போர் நிறுத்தம் அமுலிலுள்ள நிலையில் இதுவரை இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 24 பேரை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. அதற்கு ஈடாக இதுவரை பலஸ்தீனர்கள் 1,133 பேரை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

காஸாவில் இன்னும் 73 இஸ்ரேலியர்கள் பணயக் கைதிகளாக உள்ளதாகவும் இதில் 36 பேர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தங்கள் பிடியிலுள்ள பணய கைதிகளில் இறந்துபோன 04 இஸ்ரேலியர்களின் உடல்களை ஹமாஸ் ஆயுதக்குழு இஸ்ரேலிடம் ஒப்படைக்க முடிவு செய்தது. ஷிரி பிபஸ் என்ற பெண், அவரது குழந்தைகள் ஏரியல், கிபிர் மற்றும் ஓய்வு பெற்ற ஊடகவியலாளர் ஓடட் லிப்ஷிட்ஸ் (வயது 83) ஆகியோரின் உடல்கள் நேற்று (20) தெற்கு காஸாவின் கான் யூனிஸ் பகுதியில் வைத்து, 04 பேரின் உடல்களும் சர்வதேச செஞ்சிலுவை குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு தனது எக்ஸ் பக்கத்தில்,

''இது இஸ்ரேல் அரசுக்கு மிகவும் கடினமான, ஒரு கொந்தளிப்பான, ஒரு துக்க நாளாக இருக்கும். வீழ்ந்த எங்கள் அன்புக்குரிய நான்கு பணயக்கைதிகளை தாயகத்துக்கு கொண்டு வருகிறோம். எனது இதயமும் முழு நாட்டின் இதயமும் கிழிந்துள்ளது. முழு உலகின் இதயமும் கிழிந்திருக்க வேண்டும். ஏனென்றால் இங்கு நாம் யாருடன், எதைக் கையாள்கிறோம்.எப்படிப்பட்ட அரக்கர்களை சமாளிக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். மிகவும் வேதனையாகவுள்ளது. ஆனால், இதுபோன்ற ஒரு சம்பவம் மீண்டும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை உதைபந்து தொடருடன் இணைந்த ஸ்கை மார்கட் ட்ரவல்ஸ்

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதின்கீழ் பிரிவு ஒன்று சுற்றுத் தொடருக்கான அனுசரணையாளராக ஸ்கை மார்கட் ட்ரவல்ஸ் தனியார் நிறுவனம் இணைந்துள்ளது.

இலங்கை உதைபந்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கான ஒரு அங்கமாக, ஸ்கை மார்கட் ட்ரவல்ஸ் தனியார் நிறுவனம் முதல் முறையாக பங்காளராகியுள்ளது. இந்த அனுசரணை வழங்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு அண்மையில் இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனத் தலைமையகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர், பயிற்சியாளர் கற்கைகள் துறையின் பொறுப்பாளரும் முன்னாள் தேசிய அணியின் தலைவருமான சம்பத் பெரேரா, எலைட் யூத் முகாமையாளர் டட்லி ஸ்டெய்ன்வோல், பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின்




உறுப்பினர்கள் மற்றும் ஸ்கை மார்கட் ட்ரவல்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்கு நர் மொஹமட் பரூஸ், நீர்கொழும்பு, பலகத்துறை சொக்கர் பேன்ஸ் தலைவர் றிஸ்வான் மற்றும் அதன் முகாமையாளர் நுப்ரி ஆகியோர் கலந்துகொண்டனர். பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதின்கீழ் பிரிவு ஒன்று சுற்றுத் தொடருக்கு இம்முறை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் பிரதான அனுசரணை வழங்குகின்றது.

# ஒப்பந்தத்தை மீறிய சானகவுக்கு அபராதம்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் சகலதுறை வீரருமான தசுன் சானக்க, ஒப்பந்தக் கடமைகளை மீறியதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 10 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்துள்ளது.

சானக்க கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற உள்நாட்டுப் போட்டியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக மூன்று நாட்கள் விடுமுறை கோரிய நிலையில், ஆனால் அந்தக் காலகட்டத்தில் டுபாயில் நடைபெற்ற இன்டர்நெஷனல் ரி20 லீக் போட்டியில் பங்கேற்றதால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் வீரரின் எழுத்துப்பூர்வ பதிலையும் மன்னிப்பையும் கருத்தில் கொண்டதாகத் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் இருப்பினும் சானகவின் செயல்கள் ஒப்பந்தக் கடமைகளை மீறுவதாக நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளதாகக் கூறியது.

எனவே, ஒழுக்காற்று நடவடிக்கையாக 10 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்க நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது. மேலும் எதிர்வரும் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அபராதத்தை செலுத்துமாறு சானகவுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது. இணங்கத் தவறினால் மேலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் இலங்கை கிரிக்கெட் சானகவை எச்சரித்துள்ளது.

# சம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்ட அட்டாளைச்சேனை மார்க்ஸ்மேன்

**(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)**

அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

றஹீமியா அணியுடன் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை மார்க்ஸ்மேன் அணியினர் 14 ஓட்டங்களினால் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டனர். குறித்த போட்டியில் ஆட்டநாயகன், சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதுகளை மார்க்ஸ்மேன் விளையாட்டுக்கழகத்தின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கே. அஸ்ஜத் பெற்றுக்கொண்டார். இந்த சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் விருதை றஹீமியா விளையாட்டுக் கழகத்தின் வீரர் நஜாத் ஏ வகாப் பெற்றுக்கொண்டார்.



சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மார்க்ஸ்மேன் அணியினருக்கு 40 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கிவைக்கப்பட்டது. இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட றஹீமியா அணியினருக்கு 20 ஆயிரம் ரூபா பணமும் வெற்றிக்கிண்ணமும் வழங்கிவைக்கப்பட்டது.

குறித்த சுற்றுப்போட்டி நிகழ்வுக்கான அனுசரணையை சொக்கோமோ இண்டர்நெஷனல் பி.எல்.சி. நிறுவனம் வழங்கியிருந்தது. வெற்றிபெற்ற அணிக்கான பரிசில்களை அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.றியாஸ் வழங்கியிருந்தார். நிகழ்வில் விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்ப பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் ஏ.எல்.பாயிஸ் உட்பட ஹிஜ்ரா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## CHAMPIONS TROPHY 2025 - PAKISTAN இன்றைய போட்டிகள்




போட்டி இல - 03

குழு - B

தென்னாபிரிக்கா VS ஆப்கானிஸ்தான்

கராச்சி - பி.ப 2.30 மணி

முடிவு




போட்டி இல - 01

பாகிஸ்தான் VS நியூசிலாந்து

நியூசிலாந்து 60 ஓட்டங்களினால் வெற்றி




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7